உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும் ஆன்ற பெருமை தரும்."—திருவள்ளுவர்.

தொகுதி—சக.] சுபானு-ஸ்ரீ கார்த்திகைமீ [பகுதி—க.

Vol. 41. November–December 1943. No. 1.

உள்ளுறை.

ஆய்தவோசை:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான். மு. இராகவையங்காரவர்கள்	க—அ
நப்டபாடைப் பண்ணின் எட்டுக்கட்டளைகள் :—	சுவாமி விபுலாநந்தரவர்கள், இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர்	கூ—கச
உறுப்புச்செய்யுள்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.	கரு—கஅ
ஸர் ஜே. ஜே. தாம்ஸனின் இளமைப்பருவம்:—	ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.	ககூ—உச
பண்டைத்தமிழர்:—	சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.	உரு—உகூ
மதிப்புரை:—		௩0—௩க
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 42-ஆம் வருஷோத்ஸவ மங்களவாழ்த்து:—	ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்	௩உ
ஷை வருஷக்கொண்டாட்டம்	உதவியாசிரியர்	௩௩—௩சு
வரவேற்புப்பத்திரம்		௩எ—௩அ
வாழ்த்துப்பத்திரம்:—		௩கூ—ச0

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1944.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும் ...	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பணியிலக்கணங்கள்			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன் ...	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	* தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்	6	0	0
	* ஷை இரண்டாம்பாகம் ...	4	8	0
	ஷை மூன்றும்பாகம் ...	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	*அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ...			
13.	கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை ...	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ...	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-சக.] சுபானு-ஹு கார்த்திகைமீ [பகுதி-க.

Vol. 41. November-December 1943. No. 1.

ஆய்தவோசை

[ராவ்ஸாஹிப்: வித்வான். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்.]

செந்தமிழ் 23-ஆம் தொகுதியுள், 'தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்' என்ற கட்டுரையிலே, அவ்வாசிரியர்காலத்தில், ஆய்தவெழுத்து, தன்சார்பான வல்லெழுத்துக்களின் பிறப்பிடங்களையே தனக்குரியதாகக்கொண்டும் தனக்கென்று தனியொலியின்றியும் சார்ந்தவல்லெழுத்தின் சாயையான ஓசையுடையதாய் ஒலித்துவந்ததென்றும், வடமொழியில் விஸர்க்கத்துக்குரிய ஓசைபோன்றதே அதன் ஓசையமைதி என்றும், அம்முறையில்— ககரத்தின்மிசை 'க:கரோதி' என்பதுபோலவும், சகரத்தின்மிசை 'நமஶ்ஶிவாய' என்பதுபோலவும், பகாத்தின்மிசை 'க:பசதி' என்பதுபோலவும் தொல்காப்பியர்காலத்து வேறுவேறாக ஒலிக்கப்பெற்றுவந்த ஆய்தம், பின்பு ககரத்தின் மிசைவரும் ஜிஹ்வாமூலீயவொலி ஒன்றையேகொண்டு ஏனைவல்லெழுத்துக்களுக்குமுன்பு ஒலிப்பதாயிற்று என்றும் பல பிரமாணங்களுடன் விளக்கியுள்ளேன்.* இவ்வாறு வழங்கிய ஒலிகளேயன்றி, வேறோர் ஓசையையும் ஆய்தவெழுத்து இடைக்காலத்திற் பெற்றிருந்தது என்று ஆராய்ச்சியால் இப்போது அறியப்படுகின்றது. அதனையும் இங்கு விளக்குவேன்.

போலியெழுத்துக்களைப்பற்றிக் கூறிவருமிடத்தே, தொல்காப்பியனார்,

---

* ஆராய்ச்சித்தொகுதியினும் இது விளக்கப்பட்டுளது (பச், 127-131).

'அகர இகரம் ஐகாரம் ஆகும்' (தொல். எழுத். 21)

'அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' (ஷை. 22)

என்ற இரண்டுசூத்திரங்களால், ஐகாரத்துக்குப் போலியாகவரும் எழுத்துக்களைக் குறிப்பிட்டிருத்தல் கற்றூர் புலரும் அறிவர். இச் சூத்திரங்களின்படி, அஇ, அய் என்ற இரண்டும் ஐகாரத்தின் போலிகளாகும். ஆனால், இவ்விரண்டுமேயன்றி, வேறொன்றும் அதற்குப் பிரதியாக வழங்கியதுண்டு என்பது யாப்பருங்கலவிருத்தியால் தெரியவருகின்றது. முன்னோரான அவிநயனார்

"ஆய்தமும் யவ்வும் அவ்வொடு வரினே
ஐயெ னெழுத்தொடு மெய்பெறத் தோன்றும்"

என்ற சூத்திரத்தாற் குறிப்பிட்டுள்ளதனை, அவ்விருத்திகாரர் எடுத்தாளுகின்றூர். இச்சூத்திரத்திற்கு உரையும் உதாரணங்களுமாக அவர் எழுதியன வருமாறு:—

"அகரத்தொடு யகரவொற்றுவந்தும் ஆய்தம்வந்தும் ஐகாரத்தின்பயத்த வாய்நிற்கும்...வரலாறு: — அய்யன், சய்தை என ஐகாரத்தின்பயத்த வாயினவாறு. கஃசு, கஃதம், கஃசம் என அகரத்தொடு ஆய்தம்வந்து கைசு,* கைதம், கைசம் என ஐகாரத்தின் பயத்தவாயினவாறு" (பக். 30)

இக்கூற்றுக்களால், ஐகாரத்துக்கு அய் என்பதும் அஃ என்பதும் போலிகளாக முன்னோர் கொண்டிருந்தமை தெரியலாம். இக்கருத்தையே நன்னூலாரும் தழுவியவர் என்றுசொல்ல இடமுண்டு. அவர்,

"அம்முன் இகரம் ஆய்தம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும்......"

என்று சூத்திரித்திருந்தனர் என்பதும், 'அகரமுன் இகரமும்

---

* கைசு (=கஃசு) - காற்பலம். கைசு என்ற வழக்குச் சிலாசாஸனங்களினும் மிகப் பயில்வது (S. i. i. ii, pp. 75, 77, 124). "பைசல் கைச, நோய் முக்கைசு" (பையன் காற்பலம், நோய் முக்காற்பலம்) என்ற பழந் தொடரும் அறியத்தக்கது (பெரியதிருமொழி, பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம், 8-1-1).

ஆய்தமும் வரின்' என்று பதப்பொருளும், 'அஇவனம்=ஐவனம், கஃசு=கைசு' என உதாரணமும் தந்து மயிலைநாதர் அதற்கு உரையிட்டிருந்தனர் என்பதும், இப்பாடமும்* பொருளும் பழம்பிரதிகள் பலவற்றால் அறியப்பட்டவை என்பதும் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் எழுதிய குறிப்பால் அறியப்படுகின்றன†. இவற்றால், கைசு முதலிய ஐகாரமுதன்மொழிகள்—கஇசு, கய்சு, கஃசு என்ற மூவகையுருவினும் அக்காலத்து வழங்கிவந்தமை தெரியலாம். எனவே, அஇ, அய், அஃ, ஐ என்ற நான்கும் தம்முள் ஓசையொற்றுமை பெரிதுமுடையன என்பதும், அதனால் அகரத்தையடுத்த ஆய்தம் ஐ, அய், அஇ என்ற ஒலிகளைப்பெற்று இசைத்தற்கும் உரியன என்பதும் பெறப்படுகின்றன. இத்தகைய ஒலிகள் பெற்று வழங்கியதென்பதற்குப் பிரமாணமுண்டோ எனின், ஒன்றல்ல பல என்க. தோலாமொழித்தேவர் தம் சூளாமணியில் (அரசியல், 205),

"அஃதே யஃதே யங்கார வேக னாங்கோ ரயில்வாளால்
வெய்தாங் குற்று வீடினா னன்றே நன்றே மறுமாற்றம்
மைதோய் மலையு மண்ணகமு நமதாச் செய்வன் செய்யேனேல்
செய்தா ரமர ருலகாள்வ னிரண்டி லொன்று திண்ணமிதே"

எனவும், திருத்தக்கதேவர் தம் சிந்தாமணியுள் (1884),

"அஃதே யடிகளு முளரோ வென்றாற் கருளுமா
றிஃதா விருந்தவா றென்றார்க் கென்னைப் பெறவல்லார்க்
கெய்தா விடருளவே யெங்கெங் கென்றத் திசைநோக்கி
வெய்தா வடிதொழுது வேந்தன் கோயிற் கெழுந்தானே"

---

* 'அம்முன் இகரம் யகர மென்றிவை யெய்தின்' என இப்போது வழங்கும் பாடத்தினும், 'ஆய்தமென்றிவை' என்ற பழம்பாடமே சிறக்கும். என்னை? 'அஐ முதலிடை யொக்கும் சஞபமுன்' என மேல்வந்த சூத்திரத்தால், அகரத்துக்குமுன் யகரம் ஐ ஒக்கும்—எனப் போலி கூறப்பட்டுவிட்டமையின், ஈண்டும் 'அம்முன் யகரம் ஐயொத்திசைக்கும்' எனல், கூறியது கூறலாதலின் என்க. அதனால், அகரத்தின்முன்னாய்தம் ஐகாரப்போலியாக வருதலைக் குறிப்பிடுவதே நன்னூலார்கருத்தென உணர்க. அகர ஐகாரங்கள் யகரத்துக்குமுன் மொழிமுதலில் ஓசையொத்து வருவதற்கு, மையல் மயல்; ஐயர் அய்யர் என்ற இருவகை யுதாரணங்களும் ஏற்கும் என்பதும், 'அஐ முதலிடை' என்ற நன்னூற்சூத்திரம் போலிகூறவந்தது என்ற சங்கர நமச்சிவாயப்புலவர் கொள்கையே பொருத்தம் என்பதும் அறியத்தக்கன.

† நன், மயிலை. உரை, 52-கீழ்க்குறிப்பு.

எனவும் பாடியிருத்தல் நோக்கத்தகும். இப்பாடல்களிலே 'அஃது' என்பதற்கு, எய்தா, வெய்தா, மைதோய்—என அய், ஐ என்ற இரண்டும் எதுகைகளில் அமைந்துள்ளமை காண்க. இங்ஙனம் அகரத்தின்பின்வரும் ஆய்தம், ஐகார யகரவொற்றுக்களின் ஒலி பெற்றமை அறியப்பட்டதாயினும், ஏனையுயிர்களின்பின்வரும் ஆய்தவோசை யாதாம் எனிற் கூறுவேன்.

ஐயென்பதன் போலியான அஃ என்பது, மேற்கூறியவாறு அய் என்ற ஓசைபெறுதற்கு முதலெழுத்தின் பொருத்தம் உண்டு. அம்முறையில், இஃது, எஃகு முதலியனவும் அகரவோசையை முதலிற்பெற்று இசைப்பதற்குச் சிறிதும் இடமில்லை. அதனால், தனியாய்தம் யகரவொற்றோசையையே உடையதென்றும், அஃது அகரமொழிந்த குற்றுயிர்களை அடுத்துவரும்போது ய் என்ற ஓசைமட்டுமே பெறுதற்குரியது எனவும் உணர்க. அஃதாவது— இஃது என்பது இய்து எனவும், எஃகு என்பது எய்கு எனவும் இசைக்கப்பெறும் என்பதாம். உதாரணமாக:—

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்"

என்ற திருக்குறள் நோக்கத்தக்கது. இதன் எதுகைமொழிகளினின்று, 'எஃகதனில்' என்பதனிலுள்ள ஆய்தவொலி 'எய்கதனில்' என வள்ளுவனார்காலத்தும் வழங்கியதென்பது நன்கறியப்படும். இவ்வொலிவகை, அவ்வாசிரியர்காலத்துக்குப்பின்பும் பெருகவழங்கியதேயாம். மேற்காட்டிய குறளின் சொல்லும்பொருளும் அமையச் சிந்தாமணியாசிரியர் பாடிய—

"செய்கபொருள் யாருஞ் செறுவாரைச் செறுகிற்கும்
எஃகுபிறி தில்லை யிருந்தேயுயிரை யுண்ணும்
ஐபமிலை யின்ப மறனோடெவையு மாக்கும்
பொய்யில் பொருளே பொருண்மற்றல்ல பிறபொருளே"

என்ற செய்யுளினும் (497), மேலேகுறித்த 'அஃதேயடிகளும்' என்று தொடங்கும் சிந்தாமணிச்செய்யுளினும் (1884)

"கொய்தாமந் தாழ்ந்தொ சிந்த குளிர்பூம் பிண்டிக் கோமானே
இஃதே நின்சொ லியல்பென்ற லடியே னின்னைத் தொழுதேனே"

என்ற பாட்டடிகளினும் (1418)-இஃது, இஃதா, எஃகு என்பவற்றுக்கு எதுகைச்சீர்களாகக் கொய்தாமம், ஐயம், எய்தா முதலியவற்றை அவ்வாசிரியர் ஆண்டிருத்தலும், நீலகேசியாசிரியரும் 317-ம்

பாட்டில் 'செய்ததீவினை' என்பதன் எதுகையாக 'இஃதுரைப்பவர்' என்பதனை அமைத்திருத்தலும் அறியத்தக்கவை. இங்ஙனம் ஆய்தத்துக்கு யகரவொற்றினோசை அக்காலங்களிற் பெரிதும் பயின்றுவந்தமைபற்றியே—நம்மாழ்வார் எனப்பெறும் ஸ்ரீசடகோபர் அந்தாதித்தொடையாக அருளிய தம் திருவாய்மொழி 4-ஆம்பத்து முதற்பதிகத்தில், முற்பாட்டின் ஈற்றடியிறுதியான 'அஃதே' என்றசொல்லை ஆதியாகக்கொண்டு,

"அஃதேயுய் யப்புகு மாறென்று கண்ணன் கழல்கண்மேல்
கொய்பூம் பொழில்சூழ் குருகூர்ச் சடகோபன் குற்றேவல்
செய்கோலத் தாயிரஞ் சீர்த்தொடைப் பாட லிவைபத்தும்
அஃகாமற் கற்பவ ராழ்துயர் போயுய்யற் பாலரே"

என்று பாடியருளினர். இப்பாசுரத்துள், அஃதே, அஃகாமல் எனவரும் எதுகைமொழிகள்—அய்தே, அய்காமல் என்ற ஓசையுடன் அப்பெரியார்காலத்தும் வழங்கியசெய்தி தெளியப்படும். மேற்காட்டிய முன்னோர்பாடலெல்லாவற்றினின்றும், அவ்வாழ்வார் அருளிய வேறிரண்டுபாசுரங்களின் ஆதிப் பாடவமைதிகளும் நமக்கு இப்போது ஐயமின்றி வெளியாகின்றன. திருவாய்மொழி 2-ஆம்பத்து 9-ஆம் பதிகத்தின் முதலிரண்டு பாசுரங்கள்—

"எம்மா வீட்டுத் திறமுஞ் செப்பம்நின்
செம்மா பாதபற் புத்தலை சேர்த்தொல்லை
கைம்மா துன்பங் கடிந்த பிரானே
அம்மா அடியேன் வேண்டுவ தீதே"

"ஈதே யானுன்னைக் கொள்வதெஞ் ஞான்றும்என்
மைதோய் சோதி மணிவண்ண வெந்தாய்
எய்தா நின்கழல் யானெய்த ஞானக்
கைதா காலக் கழிவுசெய் யேலே"

என்று இக்காலத்தாரால் ஓதப்பெற்றும் பதிப்பிடப்பெற்றும் வழங்குகின்றன. இவற்றுள், முற்பாட்டின் அந்தத்துச்சீர் 'ஈதே' என்றிருத்தலையும், அவ்வந்தத்தை ஆதியாகக்கொண்டு அடுத்த பாசுரம் 'ஈதே யானுன்னை' என்று தொடங்கியிருத்தலையும், அத்தொடங்கிய சீர்க்கு—மைதோய், எய்தா, கைதா என எதுகைச்சீர்கள் அமைந்துள்ளதையும் காணலாம். இவ்வாறு அமைந்துள்ளதே முன்னோர் கொண்டிருந்த பாடமாயின், 'ஈதே' என்று இரண்டாஞ்செய்யுள் தொடங்கியதற்கேற்பத்—தீதே, போதே என்பன

போலும் நெட்டெழுத்துத் தொடர்ந்த எதுகையெழுத்தன்றோ பின்னடிகளிலும் வருதல்வேண்டும்? முன்னதினும் மாத்திரை குறுகிய குற்றெழுத்தும் ஐகாரக்குறுக்கமும் தொடர்ந்த எதுகை யெழுத்து அங்கு வருவதற்கு இடமே இல்லை. இப்பொருந்தாமை யை நோக்கியே திருவாய்மொழியைப் பதிப்பித்தோர் அவ்விடத் தில்—

' "இதேயான்" என்ற பாடம் செய்யுளிலக்கணத்துக்குச் சேரும் என்பர்'

எனக் கீழ்க்குறிப்பொன்றை இடலாயினர். ஆனால், அவர் கருத் துப்படி இப்பாடமும் சேராது. சேர்வதாயின், முன்வந்த பாட்டின் இறுதிச்சீரும், அந்தாதித்தொடைக்கேற்ப, 'இதே' என்று முடிந் திருத்தல்வேண்டுமன்றோ? அங்கும் அவ்வாறே பாடங்கொள்ளு மிடத்து

"அம்மா அடியேன் வேண்டுவ தீதே"

என்றமைந்து, அப்பாட்டின் ஈற்றடியோசை சிதைவதாம்.* அன்றி யும், 'இதேயான்' என்ற புளிமாச்சீர்க்கு, மைதோய், எய்தா என்ற தேமாச்சீர்கள் எதுகையாக வருதல் யாண்டுமில்லை. யாப்பிலக் கணம் வகுத்த முன்னோர்—

"இரண்டாமெழுத்து ஒன்றிவரினும் முதலெழுத்தெல்லாம் தம்முள் ஒத்தவளவினவாய் (வரும்). வந்து......காட்டு என்பதற்குப் பாட்டென்ப தல்லது பட்டு என்பது எதுகையாகாது...பாரம் என்பதற்குக் காரம் என்ப தல்லது கரமென்பது எதுகையாகாது" (யாப். வி. பக். 132)

என்று வரையறுத்திருத்தலும் காண்க. ஆகவே, மேற்காட்டிய திருவாய்மொழிப் பாசுரங்களின் அந்தமும் ஆதியுமான சீர்கள், வேறாக வழங்கிவந்தவை பிற்காலத்துப் பாடமாறலாயின என்றே கொள்ளப்படும். அவ்வந்தமும் ஆதியுமான சீர் யாது? இக்கேள் விக்குமேலே கூறிப்போந்த முடிபுகளே தக்கவிடை தருவன என்க. அஃதாவது—'இஃதே' என்ற மொழியாகும். இம்மொழியைச் சீராகக்கொண்டு நோக்குமிடத்து—

---

* 'வேண்டு வதிதே' என்றுபிரித்து வேண்டாவழி வகையுளிகொண்டு அமைக்கமுயல்வது, ஆழ்வார்திருவாக்கின் 'செந்திறத்த தமிழோசை'யைச் சிதைப்பதாம் என்க.

"அம்மா அடியேன் வேண்டுவ தீஃதே"

"இஃதே யானுன்னைக் கொள்வதெஞ் ஞான்றும் என்
மைதோய் சோதி மணிவண்ண வெந்தாய்
எய்தா நின்கழல் யானெய்த ஞானக்
கைதா காலக் கழிவுசெய் யேலே"

என இப்பாசுரங்கள் அமைவனவாம். முன்னர்க்காட்டிய பிரபல பிரமாணங்களின்படி, இவ்வாறு அந்தாதிக்களில்வந்த இஃதே என்ற சீர், இய்தே என்ற ஓசைபெறுதலையும், அச்சீர் பின்வரும் மை தோய், எய்தா, கைதா என்ற அடிமுற்சீர்களோடு அளவொத்து எதுகைத்தொடைநயம் பெறுதலையும் நோக்கிக்கொள்க. மேற் காட்டிய 'அஃதேயுய்யப் புகுமாறு' என்ற திருவாய்மொழிப்பாசுர மும் இதனைத் தெளிய வலியுறுத்துவதாம். இப்பழம்பாடத்தில் சொல்வேறுபாடன்றிப் பொருள்மாறுபாடு சிறிதும் இல்லாமை யால், பூர்வாசாரியர்காலத்துப் பாடமும் இதுவேயாக இருந்து, பின் மாறியதென்று கொள்ளத்தகும். இனி,

"அற்றா லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு" (குறள். 943)

என்பதனுள், 'உண்க' என்ற மாச்சீர்க்குமுன் நிரைமுதலான சீர்வரவேண்டுதலின், 'அஃதுடம்பு' என்று அடுத்துவருஞ் சீரிடை யிலுள்ள ஆய்தம் நிரையசையாக எண்ணப்படவேண்டு மன்றோ? இவ்வாய்தம், மேற்கூறியவாறு அய் என்ற ஓசைபெறும் போது, வெண்டளை சிதையாதோ எனிற் கூறுவேன்.

ஐகாரத்துக்கு அய் போலியாவதுபோலவே, அவ்வைகாரப் போலியான அஃ என்பதற்கும் அய் போலியாகவந்தமை மேற்கூறிய வற்றால் தெளியப்பட்டது. இதனால் அஃ என்பது ஐகாரத்தின் போலிகளையெல்லாம் கொண்டொலிக்கும் என்பது அறியலாகும். ஆகவே, ஐயின் மற்றொரு போலியாகத் தொல்காப்பியரும் அவ ரைத்தழுவி நன்னூலாருங்கூறிய அஇ என்பதும், அஃ என்பதற் குப்பிரதியாகவந்து இசைத்தற்குரியது என்பது பெறப்படுகின்றது. இங்ஙனம்—அஃ, அய், அஇ—இம்மூன்றும் ஓசையொப்புமை கொண்டு தம்முட் பரிமாறிவரக்கூடுமேனும், இவற்றுள் அய், அஃ என்பன ஒற்றுநீங்க ஒருமாத்திரையும், அஇ என்பது இரண்டு

மாத்திரையும் உடையவாகச் செய்யுளில் வருமென்றும், முன்னவை யிரண்டும் நேரசையாகவும் பின்னதான அஇ நிரையசையாகவும் வருவன என்றும் உணர்ந்துகொள்க. நிரையசையான அஇ-க்கு, அஇயர்=ஐயர்; அஇவனம்=ஐவனம் என்பன பழைய உதாரணங்க ளாம்.* இம்முறையில், 'உண்க அஃதுடம்பு' என்புழி, அஃ என்று அகரத்தையடுத்துள்ள ஆய்தவொலியை அஇ என்று இசைத்து அலகிட்டுக்கொள்ள, வெண்டளை பிறழாதென்க. இனி அகர மொழிந்த ஏனையுயிர்களின்பின்வரும் ஆய்தமோ, இகரவொலி யொன்றுமே பெற்று, அவ்வுயிர்கட்குப்பின் அக்காலத்து இசைத் தனவாதல்வேண்டும். மேற்கோளுளவேற் கண்டுகொள்க. இவற் றால், 'அஇதுடம்பு' என்பதும் முன்னோர் வழங்கிய ஆய்தவோசை என்பது தெரியவருகின்றது.

இவ்வாறு நிரையசையில் இசைக்கப்பெற்றுவந்த ஆய்தம், பிற் காலங்களில் அகுது இகுது என்று குகரவொலியேற்று வழங்குவ தாயிற்று. கம்பநாடரும்,

'அஃதைய நினையெம தரணென வுடையேம்
இஃதொரு பொருளல எமதுயி ருடனேழ்
மகிதல முழுதையு முறுகவ மலரோன்
உதுபக லளவென உரைநனி பகர்வார்''

என இவ்வொலியேபெற வழங்கியுள்ளமை காண்க. ஆயின், முன்னோரான ஆசிரியர்காலத்து வழக்கும் இதுவே என்பதற்குப் பிரமாணமில்லை.

இதுகாறும் கூறிப்போந்தவற்றால், ஆய்தவெழுத்து, தொல்காப் பியனார்காலத்தே தான்சார்ந்த வல்லெழுத்துச் சாயலான ஓசை யையும், இடைக்காலத்தில் அய், அஇ என்ற ஓசைகளையும், பிற் காலங்களிலே குகரச்சாயலான ஓசையையும் ஏற்று ஒலித்துவந்த செய்தி விளக்கமாகும்.

---

* 'அஇயர் (ஐயர்) என்பது இளம்பூரணராலும், அஇவனம் (ஐவனம்) என்பது மயிலைநாதர் முதலியோராலும் காட்டப்பட்ட உதாரணங்கள். இளம்பூரணத்தில்—'ஐயர், அஇயர் என வரும்' என்பதன்பின் 'அது கொள் ளற்க' என்றுள்ள தொடர், பின்னோரால் இடைச்செருகப்பட்டது என்பது அறிஞர் பலர் கொள்கை. அவர்கொள்கையே பொருந்துமென்க.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் தேவாரத்தில்வரும் நட்டபாடைப்பண்ணின் எட்டுக்கட்டளைகள்

சுவாமி விபுலாநந்தரவர்கள்.

[இவ்வாசிரியர் எழுதிவருகின்ற "யாழ்நூ"லின் ஆரும் இயலாக அமைந்த தேவாரவியலினின்று எடுக்கப்பட்டது]

தனிக்குற்றெழுத்தினுல் வரும் லகு, குற்ருெற்று, நெடில், நெட்டொற்றினுல்வரும் குரு என்னும் இரண்டினையும்வைத்து உறழ்தலினுலே விருத்தபேதங்களைத் தோற்றுவிக்கலாம். ஈற்றில் நின்ற குறில், விட்டிசைத்த குறில் என்னும் இவை குருவாதலும் உண்டு.

தனன மூன்று லகுக்களால் வந்தது, தாஞஞ மூன்று குருப் பெற்றுநின்றது. தஞஞ, தானஞ, தனஞ, தாஞன, தஞன, தானன என்னும் ஆறும் குருவும் லகுவும் கலந்துவந்தன. இவையெட்டுமே மூன்றெழுத்தால் வரக்கூடிய விருத்த அடிகள்.

'வேரம்போய்
மாரன்சீர்
சேருங்கால்
நேர்வன்யான்'

என்னும் விருத்தம் மூன்றுகுருவானியன்ற அடிகளால் வந்தது.

மேற்காட்டிய மூவெழுத்தடி எட்டின் ஈற்றிலும் ஒரு குருவையும், ஒரு லகுவையும் தனித்தனி பெய்தலினுற் பெறப்படும் பதினறும் நான்கெழுத்தால் வரக்கூடிய விருத்த அடிகளாம்.

தனதன	தஞதன	தனதஞ	தஞதஞ
தனதான	தஞதான	தனதாஞ	தஞதாஞ
தானதன	தாஞதன	தானதஞ	தாஞதஞ
தானதான	தாஞதான	தானதாஞ	தாஞதாஞ

என வருவன. ஐந்தெழுத்தானும் ஐந்தின்மேற்பட்ட எழுத்தானும் இயன்ற அடிகளையும் இவ்வாறு சந்தக்குழிப்பிலமைத்துக் காட்டலாம்.

'காண உள்குவீர்
வேணு நற்புரத்
தாணு வின்கழல்
பேணி உய்ம்மினே'

தான தானனு என ஐந்தெழுத்தால் வந்தது.

'தத்த', 'தய்ய', 'தந்த' என வல்லொற்று, இடையொற்று, மெல்லொற்றுப் பெற்றுநின்ற மூன்றும் வண்ணவிருத்தத்தில் மூவேறு வாய்பாடாகக் கருதப்படுவ; சந்தவிருத்தத்தில் இவை மூன்றும் தான என்பதும் ஒரே நீர்மைய. ஒரு குரு நின்றவிடத்து இரண்டு லகு நிற்றலும் சந்தவிருத்தத்தில் அமையும். அஃதாவது, தான ஓரோவழித் தனன ஆதலுண்டு.

முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நால்வகைச் செய்யுளியக்கத்தின் இயல்பினை இந்நூற் பாயிரவியல் 6-ஆம் பிரிவினுட் கூறினும்.

தெய்வஞ்சுட்டிய வாரப்பாடல் தேவாரம் ஆயிற்று எனக் கொள்ளலாம். பிறவாறு கூறுவாரும் உளர்.

முதலிலே தேவாரப்பாடல்களின் யாப்பமைதியினை ஆராய்ந்து நோக்குவாம்; அதன்மேல் இசையமைதியினை இயன்றவரை ஆராய்வாம்.

*　　*　　*　　*　　*　　*

'..............................வாகீசர் அருந்தமிழின்
முந்தாய பலதமிழுக் கொன்றென்று மொழிவித்து
நந்தாத நேரிசையாங் கொல்லிக்கு நாட்டிலிரண்
டுந்தாடும் குறுந்தொகைக்கோர் கட்டளையா விரித்துரைத்தார்'

'தாண்டகமாம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்து'

என்றமையினாலே கொல்லிப்பண்மாத்திரம் இரண்டுகட்டளை பெறு மெனவும், ஒழிந்தன ஒவ்வொருகட்டளை பெறுவவெனவும் அறி கின்றோம்.

'கூற்ருயினவாறு' என்னும் பதிகம் கொல்லியின் ஒரு கட்டளை, திருநேரிசை மற்றொருகட்டளையென்பது பெறப்பட்டது. காந் தாரப்பண்ணுக்கு இயைந்த யாப்புவிகற்பங்கள் மூன்று, ஆயினும் கட்டளை ஒன்றென்றே கூறப்பட்டது. பழம்பஞ்சுரத்திற்கும் சீகா மரத்திற்கும் இவ்விரண்டு யாப்புவிகற்பங்கள் வந்தனவெனினும் கட்டளை ஒவ்வொன்றெனவே சொல்லப்பட்டது. பழம்பஞ்சுரம் எனக்குறிக்கப்பட்ட 14-ஆம் பதிகத்தின் யாப்பு பியந்தைக்காந்தா ரம் எனக் குறிக்கப்பட்ட 8-ஆம் பதிகத்தின் யாப்பாக விருத்தலை நோக்குமிடத்து 14-ஆம் பதிகத்தையும் பியந்தைக்காந்தாரம் எனக் கொண்டு, 15-ஆம் பதிகத்தைமாத்திரம் பழம்பஞ்சுரம் எனக் கொள்ளுதல் பொருத்தமெனப் புலப்படுகிறது. ஏனைய வற்றைக்குறித்து ஓர் ஐயப்பாடும் இல்லை.

இனி, நமது தாய்நாடு உய்யும்வண்ணம் திருவவதாரஞ்செய்து, 'நாளுமின்னிசையாற்றமிழ்வளர்த்த' ஞானசம்பந்தப்பிள்ளையார், திருவாய்மலர்ந்தருளிய செழும்பாடல்களின் யாப்பமைதியினை ஆராயப்புகுவாம்.

முதற்றிருமுறை

பண்-நட்டபாடை

1. 'தோடுடையசெவியன்' 2. 'குறிகலந்தவிசை'
3. 'பத்தரோடுபலர்'

'சொன்னட்ட பாடைக்குத் தொகையெட்டுக் கட்டளையாம்'

என்றமையின், இப்பண் எட்டுக்கட்டளைபெற்றதென அறிகின்றோம். மேற்குறித்த மூன்று பதிகங்களின் கட்டளையடி,

'தோடு, டையசெவி, யன்விடை, யேறியொர், தூவெண், மதிசூடி'

யெனப் பிரிதலின்,

தான தானதன தானன தானன தானு தனதானு

என நின்றது. தானு ஓரோவழித் தானன் ஆதலும், தானன அவ்வாறே தானு ஆதலும், தான எனுஞ்சீர் தனன ஆதலும் தொடக்கத்திற் குறிப்பிட்டவிதிகட்கமைவ. இக்கட்டளையை நட்ட பாடைமுதற்கட்டளையென வைக்கலாம்.

இரண்டாஞ்சீரின் முதலில்நின்ற குருவை முதற்சீர் ஈற்றிற் சேர்த்து, அடுத்த லகுவைக் குருநீர்மையாகப் பிரித்திசைத்துப் பாட வருவது நட்டபாடை இரண்டாங்கட்டளையாகும்.

'தோடுடை, ய-செவி, யன்விடை, யேறியொர், தூவெண், மதிசூடி'

தானனு த-னன தானன தானன தானு தனதானு

எனவரும். 'குறிகலந் த-இசை', 'காதிலங் கு-குழை', 'பண்ணிலா வும்மறை' என வருதலை நோக்குக. பிரிந்திசைக்கும் லகு குருவின் நீர்மையது. 'தோடுடைய' என்னுமிடத்து 'டை' குறுகாது இரண்டுமாத்திரைபெற்றொலித்தது.

(பண் - நட்டபாடை)

4 'மைம்மருபூங்குழல்' 5 'செய்யருகேபுனல்'
6 'அங்கமும்வேதமும்' 7 'பாடகமெல்லடி'
8 'புண்ணியர்பூதியர்'

தானன தானன தான தானு எனப் பாதியடி அமையும்.

தானனவின் ஈற்றெழுத்து அடுத்தசீரினை அவாவுதலின் தான தனுதன தான தானு எனவும், தானன தான தனுன தானு எனவும் பாதியடி விகற்பமுற்றுவரும்.

தாணனவின் முதற்குரு இரண்டு லகுவாகுமிடத்துத் தனதன வந்தெய்தும்.

4-ஆம் பதிகத்தின் பாடல்களின் ஈற்றடியில் 'விரும்பியதே' என்பதில் 'ய' விட்டிசைத்துக் குருவாகும். 'மிழலை'யிலுள்ள 'ழ'வ்வும் அவ்வாறே குருவாகும்.

தானன தானன தான தானா தானன தானன தான தானா

என்பது நட்டபாடையின் மூன்றாங்கட்டளையாம்.

அடியின் முதற்பாதியில் இரண்டாஞ்சீர்முதலிலுள்ள குரு முதற்சீரீற்றையடைய இரண்டு லகுவும் தனித்து நிற்கத்

தானதனா-தன-தான தானா தானன தானன தான தானா

என வருவது நட்டபாடை நான்காங்கட்டளையாம். தானதனா என்பது தனனதனா ஆதல் அமையும்.

"பிறையுடையான்-பெரி-யோர்கள், பெம்மான்
பெய்கழல், நாடொறும், பேணி, யேத்த
மறையுடையான்-மழு-வாளு, டையான்
வார்தரு, மால்கடல், நஞ்சு, முண்ட
கறையுடையான்-கன-லாடு, கண்ணாற்
காமனைக், காய்ந்தவன், காட்டுப், பள்ளிக்
குறையுடையான்-குறட்-பூதச், செல்வன்
குரைகழ, லேகைகள், கூப்பி, னேமே"

என்னும் திருப்பாடலில் தனியசைச்சீர்களாகிய 'பெரி', 'மழு', 'கன', 'குறள்' என்பன அவை நின்றவடியின் முதலெழுத்தோடு மோனைபொருந்திநிற்றல் இவ்வாறு கட்டளைகொண்டது பொருத்த முடைத்தென்பதைக் காட்டும்.

(பண்-நட்டபாடை)

9 'வண்டார் குழலரிவை	10 'உண்ணாமுலையுமையாள்'
11 'சடையார் புனலுடையான்'	12 'மத்தாவரைநிறுவி'
13 'குரவங்கமழ்நறுமென்குழல்'	14 'வானிற்பொலிவெய்தும்'
15 'மையாடியகண்டன்'	16 'பாலுந்துறுதிரள'
17 'மனமார்தருமடவார்'	18 'சூலம்படைசுண்ணப்பொடி'

தானுதன என்பதும் அதன் விகற்பங்களாகிய தனனுதன, தனதந்தன, தானந்தன, தத்தந்தன, தத்தாதன, தந்தாதன என்பவற்றுள் ஏற்பவும் முதல் மூன்று சீர்களாகத் தானு, அன்றேல் அதன் விகற்பமாகிய தனனு நான்காஞ்சீராகவும் அமைந்தது நட்டபாடை ஐந்தாங்கட்டளை.

முதற்சீர் தானுவும் அதன் விகற்பமும் ஒழிந்த மூன்றும் தனதானுவும் அதன் விகற்பங்களுமாக அமைந்தது நட்டபாடை ஆறுங்கட்டளை.

'வண்டார்குழல், அரிவையொடும், பிரியாவகை, பாகம்'

'வானிற், பொலிவெய்தும், மழைமேகங், கிழித்தோடி'

என வருவன.

சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய முதலாம் திருப்பதிகத்தை யாராயுமிடத்து இந்த யாப்புவிகற்பத்தை மீட்டுங் குறிப்பிடுவாம்.

(பண்-நட்டபாடை)

19 'பிறையணிபடர்சடை' 20 'தடநிலவியவரை'
21 'புவம்வளிகனல்புனல்' 22 'சிலைதனைநடுவிடை'

தன என்னும் அசை பன்னிருமுறைவருதலின் இருபத்து நான்கெழுத்தாலியன்ற அடியானது அறுசீராகவும் நாற்சீராகவும் பிரிதலின் இருகட்டளைவிகற்பமாயிற்று.

தனதன தனதன தனதன தனதன தனதன தனதன

'பிறையணி, படர்சடை, முடியிடை, பெருகிய, புனலுடை, யவனிறை'

என்பது நட்டபாடை ஏழாங்கட்டளையாம்.

தனதனதன தனதனதன தனதனதன தனதனதன

'பிறையணிபடர், சடைமுடியிடை, பெருகியபுன, லுடையவனிறை'

என்பது நட்டபாடை எட்டாங்கட்டளையாம்.

இவ்வாறு நட்டபாடைக்குரைத்த எட்டுக்கட்டளையும் வந்தமை காண்க.

உ

உறுப்புச்செய்யுள்

[ராவ்ஸாகிப். எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L.

தமிழாராய்ச்சித்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்]

வெண்பாப்பாட்டியலில் 'உறுப்புச்செய்யுள்' எனச் செய்யுள் வகையொன்று கூறப்பட்டுள்ளமை பலரும் அறிவர். இதன் இலக்கணம்,

> 'வழக்கின் மரபியலின் நேர்ந்து வழுவாது
> இழுக்கி வடவெழுத்தை இன்பம்–வழுக்காது
> முன்னையோர் பாட்டில் பயின்ற மொழியன்றே
> சொன்ன உறுப்பின் துணிபு' (பொது-5)

என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவ்விலக்கணத்தின்படி, இச்செய்யுள்வகையில் வருஞ்சொற்கள் மூன்று இயல்புகள் உடையனவாயிருத்தல்வேண்டும்.

1 வழக்கினோடும் மரபினோடும் பொருந்தி, வழுவாமை

2 வடவெழுத்துக் கலவாமை

3 இன்பம் நிரம்பிச் சான்றோர்செய்யுட்களிற் பயின்று வந்த சொல்லுடைமை

மூன்று இயல்புகளையும் தெளிவாக உணர்ந்துகொள்ளுதல் அவசியம். வழக்கு என்பது செய்யுள்வழக்கு, உலகவழக்கு என்ற இரண்டனையும் குறிக்கும். மரபு என்பது தொல்காப்பியத்துள் மரபியலில் விதித்தனபோன்ற நியமங்களைக் குறிப்பது. வடவெழுத்து என்பது வடமொழிக்கே சிறப்பாக உரிய எழுத்துக்கள். எனவே வருக்க எழுத்துக்களுள் பலவும் ஷ, ஸ முதலிய எழுத்துக்களும் பிறவும் விரவிவாலாகா. இயல்பாகவே இன்னோசையுடையனவாய் இன்பம்பயப்பனவும் சான்றோர்செய்யுட்களிற் பயின்று வந்தமுறையில் இன்பம்பயப்பனவுமாயுள்ள சொற்கள் ஆளப்படுதல்வேண்டும்.

இவ்வகைச்சொற்கள் அமைந்ததை 'உறுப்புச்செய்யுள்' என்று பெயரிட்டது எக்காரணம்பற்றி என்ற கேள்வி எழுதல் இயல்பே. வடமொழியில் தண்டியாசிரியர் 'காவ்யங்களின் சரீரமும் அலங்காரங்களும் தொல்லாசிரியர்களால் காட்டப்பட்டுள்ளன; கருதியபொருளைப் புலப்படுக்கும் சொல்லின்தொகுதியே சரீரமாவது.' (முதற்பரிச்சேதம். 10) என்று கூறினர். இவர் கூறியதனையே வீரசோழியநூலாரும்,

உரையுட லாக உயிர்பொரு ளாக உரைத்தவண்ணம்
நிரைநிற மாகநடை யேசெல வாநின்ற செய்யுட்களாம்
தரைமலி மானிடர் தம் அலங் காரங்கள் தண்டிசொன்ன
கரைமலி நூலின் படியே உரைப்பன் கனங்குழையே (143)

எனச் சிறிது விளக்கினர்.

காவ்யசரீரமாகிய சொற்றொகுதிக்கு உறுப்புச் சொற்களேயாதல் தெளிவு. இச்சொற்களுள் ஒருசில நல்லியல்புகளுடையனவற்றால் இயன்றுவருஞ் செய்யுளை 'உறுப்புச்செய்யுள்' என வெண்பாப்பாட்டியலாசிரியர் கொண்டனராம் எனத் தோன்றுகிறது. இப்பெயர் இப்போது அகப்படும் முந்துநூல்களிற் காணப்படவில்லை. வீரசோழியம் எவ்வகைச்சொற்கள் குற்றமற்றவுறுப்பாம் என்பதையும் எவ்வகைச்சொற்கள் பழிக்கப்பட்ட உறுப்பாம் என்பதையும் இரண்டு காரிகைகளால் உணர்த்துகின்றது. 144-ஆம் காரிகையில் குற்றமற்ற உறுப்பு விளக்கப்படுகிறது.

சார்ந்த வழக்கொடு தப்பா வடவெழுத் தைத்தவிர்ந்து
தேர்ந்துணர் வார்க்கும் இனிமையைத் தந்துசெய் யுட்களினும்
நேர்ந்து சொலப்பட் டியர்ந்தவ ரால்நிர லேபொருளை
ஓர்ந்து கொளப்படுஞ் சொற்குற்ற மற்ற உறுப்பென்பரே.

என்பது அக்காரிகை. 'தப்பா' என்பதனைத் 'தமிழினோடுங்கூடி' என வீரசோழிய உரைகாரர் விளக்குவர். இதன்பொருள் 'தமிழ் மரபினோடுங்கூடி' என்றாதல்வேண்டும். எனவே உறுப்புச்செய்யுள் பற்றி வெண்பாப்பாட்டியலிற்காணுங் கருத்துக்கள் அனைத்தும் இங்கே கூறப்பட்டுள்ளமையுணரலாம். புதியதொருகருத்தும் கூறப்பட்டுள்ளது. அது சொற்கள் திரிதற்பொருள்கோள் இன்றியே நிரலே பொருள்விளங்குவனவாயிருத்தல்வேண்டும் என்பதாகும்.

பழிக்கப்பட்ட உறுப்பு 145-ம் காரிகையில் உணர்த்தப்படுகின்றது.

தெற்றி வழக்கொடு தேர்ந்துணர் வார்க்கின்பம் செய்யவின்றிப்
பற்றி வடநூல் எழுத்துக்க ளோடு பயின்றுரையின்
மற்றிவை இல்லென்று வாங்கவும் பட்டுப் பொருள்மருண்டிப்
பெற்றியுடைச் சொல் பழித்த உறுப்பென்று பேசுவரே

என்பது அக்காரிகை. இங்கே குற்றமற்ற உறுப்புக்களின் மறுதலையியல்புகள் யாவும் கூறப்பட்டிருத்தல் காணலாம்.

இம்மறுதலையியல்புகளாவன:—

1 வழக்கொடு மாறுபடுதல்

2 இன்பமின்மை

3 வடவெழுத்துப் பயின்றுவரல்

4 சான்றோர்செய்யுட்களிற் பயின்றுவாராமை

5 பொருள் மருண்டிருத்தல்

இவ்வியல்புகளை உட்கொண்டு வெண்பாப்பாட்டியலாசிரியரும்,

துணித்ற் கரிது பொருளென்றும் சோர்வு
பணிவுற்ற சொன்மேற் படுத்தும் - அணிபொருட்டால்
மற்றுமுண் டென்றும் உரைப்போர் வழுச்சொல்லின்
இற்றன்றோ பாவின் இழுக்கு (பொது. 6)

என்று விதித்தனர். இலக்கணவிளக்கப்பாட்டியலுடையாரும்,

தெளிந்த வழக்கொடு சிறந்த பொருள்படூஉம்
இன்பம் ஒரீஇ வடவெழுத்தே மிக்கு
முதிர்சொற் புணர்க்கா தெதிர்சொற் புணர்த்து
மாலுறச் செய்தல் வழுவா மென்பர் (பாட்டியல்-126)

எனச் சூத்திரஞ்செய்தனர்.

இனி, நவநீதப்பாட்டியலில் மேற்குறித்த வீரசோழியக்காரிகை (145) பெரும்பாலும் வேறுபாடின்றி வந்துள்ளமை நோக்கத்தக்கது. இப்பாட்டியற்பதிப்பில் அடிக்குறிப்பாகக்காட்டிய பாடங்கள் பல வீரசோழியத்தில் வந்துள்ளமையும் நோக்கத்தக்கது.

ஆகவே இப்பாட்டியற்செய்யுள் அதன் புத்துரைகூறுமாறு உறுப்புச் செய்யுளை உணர்த்துவதன்றும். பழித்த உறுப்பின் இயல்புகளையே எடுத்துச்சொல்லுவதாம். பழையவுரையும் இக்கருத்தினையே ஆதரிக்கின்றது. எனவே, இச்செய்யுளின் உண்மைவடிவம்,

தெற்ற வழக்கொடு சேர்ந்தணர் விற்கின்பஞ் செய்தலின்றிப்
பற்றி வடநூல் எழுத்துக்க ளைப்பழை யோருரையின்
மற்றிவை இல்லையென் றோத லுடன்படல் மாலியலாற்
பெற்றி யுடைச்சொற் பழித்த வுறுப்பென்று பேசுவரே. (82)

என்பதாதல்வேண்டும்.

வீரசோழிய உரைகாரர் கூறுவன ஒருசில ஈண்டுக்கருதற் பாலன. 'இவ்வுறுப்புக்களால் நிரம்பின உடல் (சொல்லின்தொகுதி அல்லது செய்யுள்) குற்றப்பட்டதாயிற்று என்பது. ஆயின் மணிப் பிரவாளத்துக்கும் விரவியலுக்கும் வடவெழுத்துளவெனில், அவையிற்றுக்கன்று இவ்விலக்கணம், கீழ்க்கணக்கு முதலாகிய செய்யுட்களுக்கே என்று அறிக........அவைகள் (பழித்தசொற் கள்) அன்றுள்ளாளொரு குரிசிலைப்புகழ்ந்து செய்யுங் கவியுள் மறந் தேயும் வரப்பெறாவெனக்கொள்க.'

இக்கூற்றால் கவிஞர் காவியம் இயற்றுதலில் பழித்த உறுப்பு வாராமற்காத்தல் ஒருபெருநியதி என்பது காணலாகும். 'புகழ்ந்து செய்யுங்கவி' என்றதனை நவநீதப்பாட்டியற் பழையவுரை (82) 'பரசுசெய்யுள்' எனக் குறித்ததாம் எனக் கருத இடமுண்டு. பிறி தோர் இயல்பை அது கருதிற்றெனக்கொள்ளுதலும் அமையும். உத்படர் என்னும் ஆசிரியர் தமது அலங்காரஸங்கிரகத்தில் உப நாகரிகம், கிராமியம், பருஷம் என்ற மூன்றுவகை நெறிகளை உணர்த்துகின்றார். இவற்றுள் 'பருஷம்' என்பது பரசுசெய்யுள் எனப்பட்டது எனக் கருதுதலும் தகும். 'பருஷம்' என்பது கடுஞ் சொல் என்று பொருள்படும். இச்சொற்களே பழித்த உறுப்பிற் குரியன.

ஈண்டு எழுதியவற்றால் உறுப்புச்செய்யுள் என்றதனை ஒருவாறு உணரலாம்.

ஸர் ஜே. ஜே. தாம்ஸனின் இளமைப்பருவம்

பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.

மாஞ்செஸ்டர் நகரத்துக்கு அருகில் சீதம் என்னும் சிற்றூர் ஒன்றிருக்கிறது. அவ்வூரிலே 1856-ஆம் வருஷம் டிசம்பர்மாதம் 18-ஆம் தேதியன்று நான் பிறந்தேன். பிறந்த இடமும் நல்ல இடம், காலமும் நல்லகாலம். ஏனென்றால், அக்காலத்தில் விசேஷசம்பவங்கள் மலிந்துதோன்றின. பற்பல அரசாட்சிகள் சரிந்துவீழ்ந்து, குடியரசுகளும் ஸர்வாதிகாரங்களும் தலைதூக்கியகாலம் அது. ஆனால் அவைகளைப்பற்றி எனக்கு அவ்வளவு அக்கரையில்லை. நம் மக்களுடைய வாழ்க்கையிலே மிகப்பெரிய மாறுதல்கள் உண்டாகிய அக்காலத்திலே, புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டவை யாவை? இயற்றப்பட்ட புத்தமைப்புக்கள் யாவை? என்பனதாம் என்மனத்தைக் கவர்ந்துள்ள விஷயங்கள்.

நான் சிறுவனயிருந்தபொழுது, பைசிகள், மோடார்கார், ஏரோப்லேன், மின்சாரவிளக்கு, டெலிபோன், கிராமபோன், சினிமா, எக்ஸ்-ரேபடம், கம்பியில்லாத்தந்தி-இவற்றுள் ஒன்றும் கிடையாது. நோய்வித்துக்களாகிய விஷப்பூச்சி(germ)யும் கிடையாது: அதாவது அது இருக்கிற சமாசாரம் டாக்டர்களுக்குக்கூடத் தெரியாது.

நான் பௌதிகசாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டது வேண்டுமென்று நினைத்துச்செய்த காரியமன்று; அது தற்செயலாய் ஏற்பட்ட காரியம். முதலில் நான் எஞ்சினியராகவேண்டுமென்றுதான் நினைவு. அந்தக்காலத்திலே எஞ்சினியர் ஆவதற்கு ஒரே ஒருவழிதான் உண்டு. அதாவது எஞ்சினியரிங்தொழிலை நடத்திவரும் கம்பெனி ஏதாவது ஒன்றில் சேர்ந்து, வேலைகற்றுக்கொள்ளவேண்டும். அந்தக் கம்பெனியார் தம்மிடம் வேலைகற்றுக்கொள்ள இடம் கொடுப்பதற்காக அவர்களுக்குப் பெருந்தொகையை முன்பணமாகக் கட்டவேண்டும்; கட்டாவிட்டால் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். ரயில்வே எஞ்சின்கள்செய்வதில் கியாதிபெற்றிருந்த ஷார்ப், ஸ்டீவர்ட் அண்டு கம்பெனியில் (Sharp, Stewart & Co) நான் வேலைகற்றுக்கொள்ளுவது என்று தீர்மானித்திருந்தோம். ஆனால் அவர்கள் தற்போதைக்கு இடம் ஒன்றும் காலியில்லை

என்றும், இடம் காலியேற்படுவதற்குச் சிறிதுகாலம் பிடிக்குமென்றும், அதன்பிறகு வந்தால் சேர்த்துக்கொள்ளலாமென்றும் என் தகப்பனரிடம் தெரியப்படுத்தினர்கள். என் தகப்பனர் தன்னுடைய நண்பர் ஒருவரோடு இதைக்குறித்துத் தற்செயலாய்ப் பேசநேர்ந்தது. அதற்கு அவர் சொன்னர், 'நானயிருந்தால், இடம் காலியாகிறவரை, பையனை ஓவன்ஸ் காலேஜில் படித்துக்கொண்டிருக்கச் சொல்லுவேன். அது நல்ல பள்ளிக்கூடம்போல் தெரிகிறது: ஏனென்றல், இந்த வருஷம் கேம்ப்ரிட்ஜில் கணக்கில் முதலாவதாகத்தேறிய ஜான் ஹாப்கின்ஸன் அந்தப்பள்ளிக்கூடத்தில்தான் படித்தான்' என்று. என் தகப்பனர் அந்தப்படிசெய்யவே, நானும் ஓவன்ஸ் காலேஜில் போய்ச்சேர்ந்தேன்.

இவ்வாறு அகஸ்மாத்தாய் நேர்ந்த இந்த நிகழ்ச்சிதான் என்னுடைய வாழ்நாளில் மிகவும் முக்கியமானது. இதுதான் என் உத்தியோகம் இன்னதென்று தீர்மானித்த ஏது. மாஞ்செஸ்டர் நகரத்தில் தவிர வேறெங்கேயாகிலும் நான் இருந்திருந்தால் இந் நிகழ்ச்சி நடந்திருக்கமுடியாது. ஏனென்றல், ஓவன்ஸ் காலேஜ் போன்ற காலேஜ் நாட்டிலே வேறெங்கும் கிடையாது.

நான் ஓவன்ஸ்காலேஜுக்குப் போகும்போது எனக்கு வயது பதினறு. பதினறுவயதுக்குக் குறைந்தவர்களை இக்காலத்தில் அங்கே சேர்த்துக்கொள்ளுவதில்லை. என்னைச் சேர்த்துக்கொண்டதுகூட மிகவும் வெட்கக்கேடானகாரியம் என்று பள்ளிக்கூட அதிகாரிகள் நினைத்தார்கள். தாதிகள் கைவண்டியிலேற்றித் தள்ளிக்கொண்டுவந்து குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துவந்துவிடுவார்களோ என்று அவர்கள் பயந்தார்கள் போலும்! அம்மாதிரியான ஆபத்து ஏதாவது வந்துவிடக்கூடாதென்று நினைத்துப் பள்ளிக்கூடம் சேர்வதற்கு உரிய வயதைப் பிறகு உயர்த்திவிட்டார்கள்.

*   *   *   *   *

என் படிப்பைப்பற்றிப்பேசும்பொழுது எனக்கு முதன்முதலிலே நினைவுக்குவருகிறது என்னவென்றல், எனக்கு நடனமாடக் கற்றுக்கொடுக்கமுயன்றமுயற்சிதான். அது நிகழ்ந்து எழுபதுவருஷத்துக்குமேலானபோதிலும், இப்பொழுதும் அது எனக்கு நன்றக ஞாபகம் இருக்கிறது. எனக்கு அதன்மேல் அவ்வளவு வெறுப்பு.

கொஞ்சநாள் முயன்றுபார்த்தார்கள். பிறகு எனக்கு நடனமாட வாராதென்று அவர்களே விட்டுவிட்டார்கள்.

என் தாயாருக்குச் சிநேகிதர்களான இரண்டு ஸ்திரீகள் குழந்தைப்பள்ளிக்கூடம் ஒன்றுவைத்து நடத்திவந்தார்கள். அது மிகச் சிறிய பள்ளிக்கூடம். அதிலே சிறுவர்களும் சிறுமிகளும் படித்துவந்தார்கள். இரண்டொருவருஷம் அதிலே படித்தேன். பிறகு சீதம் என்ற எங்கள் ஊரிலே ஆல்ம்ஹில் என்னும் இடத்திலே இரண்டு சகோதரர்கள் —டவுன்செண்ட் (Townsend) என்பது அவர்கள் பெயர்—நடத்திவந்த 'ப்ரைவேட் ஸ்கூல்' ஒன்றிலே என்னைச்சேர்த்தார்கள். அந்தப் பள்ளிக்கூடம் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தது. அப்பொழுது புதிதுபுதிதாய் அமுலுக்கு வந்துகொண்டிருந்த நவீனக்கல்விமுறைகள் ஒன்றும் அதைப் பாதிக்கவில்லை. லத்தீன் இலக்கணம் அங்கே கற்றுக்கொடுத்தார்கள். இலக்கணவிதிகள் எல்லாம் லத்தீன் பாஷையிலேயே இருந்தன. பொருள்தெரியாமல் குருட்டு நெட்டுருப்போட்டோம். இலக்கணப்பாடப்புஸ்தகம் நல்ல புஸ்தகம்: எராஸ்மஸ் (Erasmus) அதைத் திருத்திக்கொடுத்தாரென்று சொல்வதுண்டு. எதுகை முறையில் அது அமைந்திருந்ததால் மனப்பாடம்செய்வது எளிதாயிருந்தது. கேட்க நன்றாயிருந்தபடியால் ஒப்பிப்பதும் உற்சாகமாயிருந்தது. நான் ஓவன்ஸ்காலேஜுக்குப் போனபொழுது அங்கே நடத்தியது புதுமுறையிலக்கணம்: வெறும் வறட்டு இலக்கணமாக இருந்தது. நான் முன்னால்படித்த இலக்கணமே அதைக் காட்டிலும் சுவையுள்ளதென்று எனக்குத் தோன்றிற்று. வெகு காலத்துக்குப்பிறகு, நான் பள்ளிக்கூடத்திற்படித்த இலக்கணப் புஸ்தகம் என்கையில் அகப்பட்டது. இடையில் ஐம்பதுவருஷ காலமாக அதைத் திறந்துகூடப் பார்த்ததில்லை. ஆனாலும் முதற் சூத்திரத்தில் தொடங்கிவிட்டால் கடைசிச்சூத்திரம்வரையிலும் தட்டுத்தடையில்லாமல் அப்பொழுதும் என்னால் ஒப்பிக்கமுடிந்தது. சிறுவயதிலே ஞாபகசக்தி அதிகம்; ஆதலால் மனப்பாடம்செய்வது மிகவும் எளிது. ஆயினும், தற்காலத்துப்பள்ளிக்கூடங்களிலே இந்த அனுகூலத்தைப் போதிய அளவு பயன்படுத்திக்கொள்ளக் காணேம். சிற்சிலர் ஞாபகசக்தியைப்பற்றிப் பேசுவதைப்பார்த்தால், அது வாய்த்திருந்தால் அது ஒரு குறை என்றும், அதைப் பெற்றவர்கள் அதற்காகக் கன்னத்திற்போட்டுக்கொள்ளவேண்டிய

தவறுசெய்தவர்களாக அவர்கள் நினைக்கிறார்கள் என்றும் தோன்றுகிறது. எங்களுக்கு இங்கிலீஷ் கற்றுக்கொடுத்த ஆசிரியர்கள் ஷேக்ஸ்பியர், பைரன், ஸ்காட் முதலிய கவிகளிலிருந்து 'சிறந்த' பாகங்களைப் பாராமற் படித்து ஒப்பிக்கச்சொல்லிவந்தார்கள். இப்பொழுதோவெனில், புஸ்தகங்களில் கடைசியில் போடப்பட்டிருக்கும் உரையையும் குறிப்புக்களையும் நெட்டுருப்பண்ணுவது தான் பரீக்ஷைக்குப்படிப்போர் பின்பற்றும் முறையாக இருக்கிறது. நாங்கள் பின்பற்றியமுறை இதைவிட மேலானமுறை என்பதுதான் என் அபிப்பிராயம்.

எங்கள்நாளில் நாங்கள் கட்டுரைகள் எழுதிப் பழகியதில்லை. நாங்கள் எழுதிய வியாசம் ('காம்பொஸிஷன்') எல்லாம் மூன்று மாதத்துக்கு ஒருதரம்—ஒவ்வொரு கெடுவின் முடிவிலும்—எங்களுள் ஒவ்வொருவரும் தாங்கள் அதுவரை பள்ளிக்கூடத்திற் செய்த காரியங்களைப்பற்றித் தங்கள் தங்கள் வீட்டுக்கு எழுதுவதுதான். இதைக்கூட நாங்கள் சொந்தமாக எழுதுவதில்லை. அவரவர் வகுப்பு உபாத்தியாயர் சொல்லிக்கொண்டேபோவார். வகுப்பிலுள்ளோர் எல்லோரும் அதை அப்படியே எழுதி வீட்டுக்கு அனுப்பிவிடுவோம். எல்லார்கடிதமும் ஒன்றுபோலவே இருக்கும். அவ்வாறு எங்கள் உபாத்தியாயர்சொற்படி நாங்கள் எழுதிய ஒருகடிதத்தின் தொடக்கம் நினைவுக்குவருகிறது. "எனது அன்புள்ள தந்தையீர்,—'ஒவ்வொரு ஆண்மகனும் தன்கடமையை இன்று நிறைவேற்றுவான் என்று இங்கிலாந்து எதிர்பார்க்கிறது' என்பது ஒருசந்தர்ப்பத்திலே மிகப்பெரிய கப்பற்படைவெற்றி ஒன்றின் பீடிகையாக இருந்தது." வீட்டுக்கு எழுதும் கடிதத்தை இந்தமாதிரியாகத் தொடங்கக்கூடும் என்பது தானாகவே எனக்கு ஒருநாளும் தோன்றியிராது என்று நினைத்துக்கொண்டேன்.

அப்பொழுது சரித்திரம் என்றால், விசேஷநிகழ்ச்சிகள் நடந்த தேதிகளை நெட்டுருப்பண்ணுவதுதான். பூகோளம் என்றால், நான்கு எல்லைகளின் விவரங்களும், முக்கியமான பட்டணங்களின் பெயரும், நதிகளின் பெயரும் அடங்கிய அட்டவணை. கொஞ்சம் கொஞ்சம் படம்வரைவதும் அதில் உண்டு. க்ஷேத்ரகணிதத்தை (யூக்லிட்டை)ப் பாராமல் படித்தோம். பீஜகணிதம் (ஆல்ஜிப்ரா) கிடையாது. நிறையக் கணக்குப்போட்டோம். நாங்கள் படித்தபடிப்புத் துருப்பிடித்துப்போகாமலிருக்கும்பொருட்டு, சாமர்த்தியமான

ஏற்பாடு ஒன்று செய்திருந்தார்கள். பள்ளிக்கூடம்விடும் மணி அடிப்பதற்குக் கால்மணிநேரத்துக்குமுந்திப் பாடங்களை நிறுத்திவிடுவார்கள். பிறகு வகுப்பில் முதல்மாணவனைப்பார்த்து உபாத்தியார் ஒருகேள்வி கேட்பார்—அக்கேள்வி சரித்திரத்தில் ஏதாவது ஒருதேதியாயிருக்கலாம்; ஒரு மனக்கணக்காயிருக்கலாம்; ஏதாவது லத்தீன்வார்த்தை ஒன்றுக்கு ஈடான ஆங்கிலச்சொல்லாயிருக்கலாம்; அல்லது இந்தமாதிரி வேறு ஏதாவது ஒன்றாயிருக்கலாம். பையன் சரியானபடி பதில்சொல்லிவிட்டால் அவன் உடனே எழுந்திருந்து வீட்டுக்குப் போய்விடலாம். அவனுக்குப் பதில்சொல்லத்தெரியாவிட்டால், அடுத்தவனைக் கேட்பார்:—யாராவது ஒருவன் சரியாகப் பதில்சொல்லுகிறவரையில் 'அடுத்தவன்', 'அடுத்தவன்' என்று கேட்டுக்கொண்டேபோவார். சரியாகப் பதில்சொன்னவன் வெளியே போய்விடலாம். பிறகு, வேறொரு புதுக்கேள்வியை அவனுக்கு அடுத்தாற்போல் உள்ளவனைக் கேட்பார். இப்படியே நடந்து கொண்டேவரும். ஏதாவது ஒருகேள்விக்குச் சரியானவிடை சொன்னாலன்றிப் பையன் மணியடிப்பதற்குமுன் வகுப்பைவிட்டு வெளியேபோகமுடியாது. வீட்டுக்குப்போகும் ஆசையால் படிப்பில் கருத்து உண்டாகும்!

நாங்கள் வீட்டிலும் பாடம் படிக்கவேண்டியிருந்தது. வீட்டுப் படிப்பு சுமார் ஒருமணிநேரம் பிடிக்கும். வீட்டிலே செய்யவேண்டிய எழுத்துவேலையும் ஏதாவது இருக்கும்—மொழிபெயர்ப்போ, கணக்கோ, அல்லது பாட்டுக்கட்டும் வேலையோ இருக்கும், கையெழுத்து எப்படியிருக்கிறது என்று பார்ப்பார்கள். கையெழுத்து நன்றாயிராவிட்டால் மார்க்குக் குறைந்துபோகும். பரீக்ஷை ஒன்றும் கிடையாது. நாங்கள் வகுப்பில் வருஷமுழுதும் பாடம் ஒப்பித்ததை வைத்துக்கொண்டு தரப்படி பரிசுகள் கொடுப்பார்கள்.

எங்கள்நாளில் பெரிய பிள்ளைகள் காற்பந்து, கிரிக்கெட், ஒரு மாதிரியான முரட்டு ஹாக்கி முதலிய விளையாட்டுக்களை விளையாடுவார்கள். எல்லா விளையாட்டுக்களுமே அந்தநாளில் முரட்டுத்தனமாகத்தான் இருக்கும். ஒருசமயம் ஹாக்கி விளையாடும்போது, ஒருவன் ஹாக்கிமட்டையைத் தலைக்குமேல் வீசினான். என் கண்ணில் அடிபட்டது; நல்லவேளையாகக் கண்பிழைத்தது. கோல்களை வைத்துக்கொண்டு சிலம்பம் பழகுவதும் உண்டு. இது உடலுக்கு

உறுதியளிப்பதோடு குணத்தையும் சீர்மைப்படுத்தும். காலிலுள்ள குதிரையெலும்பில் கோலினல் அடிபட்டால் கோபம் மண்டிக் கொண்டு வரப்பார்க்கும்; அதை அடக்கிக்கொள்வது நல்ல அப்பியாசம்.

* * * * *

நான் சிறுவனயிருக்கும்பொழுது எனக்குத் தோட்டம் என்றால் வெகுபிரியம். இப்பொழுதும் அப்படித்தான். எனக்குத் தோட்டத்திலே சிறு இடம் ஒன்று கொடுத்திருந்தார்கள். அதிலே என் இஷ்டப்படி என்னவேண்டுமானுலும் செய்யலாம். என்கையில் கிடைத்த சில்லரைக்காசையெல்லாம்போட்டுத் தோட்டப்பத்திரிகை ஒன்று வாங்கினேன். அது வாரத்துக்கு ஒருமுறை வெளிவரும். இந்த நாளிற்போல மலிவான பத்திரிகைகள் அப்பொழுது கிடையா. என்தோட்டம் குட்டிச்சுவராய்ப்போனதற்கு இந்தப் பத்திரிகைதான் காரணம்; என்தோட்டத்தில் இல்லாத செடி ஏதாவது ஒன்றைப்பற்றி அது பெரிதாக வருணித்துப்புகழும். உடனே என்தோட்டத்திலே அந்தச்செடியை உண்டாக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றும். அந்த விதையை வாங்குவேன். என்தோட்டமோ சிறியது. அதனுல், புதிதாக ஏதாவதொரு செடியின்விதையை ஊன்றவேண்டுமானுல், முன்னுலே முளைத்துள்ள பழைய செடிகளிற் சிலவற்றையாவது பிடுங்கியெறிந்தாலன்றி முடியாது. ஆகையால் என்செடிகளிற் பெரும்பாலன அகாலத்தில் தொலைந்துபோயின. அந்தக்காலத்தில் எனக்குப் பூவின்மேல் மிகுந்த மோகம். காட்டுச்செடிகளையும் பூக்களையும் பார்த்துப்பார்த்து மகிழ்வேன். எங்கேயாவது புதுவகையான புஷ்பங்கள் இருக்கின்றனவா என்று தேடுவேன். நான் பெரியவனுனபோது தாவரவிற்பன்னனுக ஆக வேண்டுமென்பது என் ஆசை. செடிகொடிகளுக்குள்ள சாதாரணப்பெயரைவிட்டுவிட்டுச் சாஸ்திரப்பெயர்கள் கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது எனக்கு எரிச்சல்வரும். நான் தாவரசாஸ்திரவிற்பன்னனுக ஆனுல் இந்தப்பெயர்களையெல்லாம் தொலைத்துவிடுவேன் என்று பிரதிஜ்ஞைசெய்துகொண்டேன்.

[தொடரும்]

பண்டைத்தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

[௪0-ஆம் தொகுதியின் ௪௧0-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கு ஆசியாவில் தமிழர்

முற்கூறியவாறு பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் மேற்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் தமிழர் குடியேறியிருந்தனர் என்பது அத்தேசங்களில் இன்றைக்கும் மருவிவழங்குகின்ற பழந்தமிழ் இடப்பெயர்களால் விளங்குகின்றது. இந்த ஆராய்ச்சியில் கிளேமென்ஸ் ஷூனர் (Herr A. Clemens Schoener) எனும் சர்மானியர் முக்கியமாய்த் தலையிட்டவராகின்றார். அவர் இன்றைக்குத் தமிழின் மணமும் வீசப்பெறாத அந்த நாடுகளில் உள்ள ஆயிரக் கணக்கான தமிழ் இடப்பெயர்களை ஆராய்ந்து அவற்றுள், பலநூறு சொற்களைத் திரட்டி சர்மானியபாஷையில் ஒரு அகராதியாக இயற்றி அந்த அகராதிக்கு ஆர்மலூரிஷ் (Armalurisches) என்று நாமகரணஞ்செய்துள்ளார்.* ஆறு மலை ஊர் என்பவற்றின் பெயர்கள்கொண்டதே ஆர்மலூரிஷ் எனக் காண்க. மேற்காசியாவிலும் ஐரோப்பாவிலும் இன்றைக்கு உள்ளபடி அப்பெயர்களைப் பழந்தமிழ் என்று சொல்லிவிடலாகாது. அவைகள் முன்னாட்கொண்டிருந்த தமிழ் உருவத்தை இந்த நிபுணர் பழையகாலத்துச் சரித்திரநூல்களிலிருந்து எடுத்துப் பலவகைப்பட்ட ஆராய்ச்சிகொண்டே அவற்றைத் தமிழ் என நிலைநாட்டுகின்றார். இவரைப் பின்பற்றி மேல்நாடுகளிலுள்ள ஆறு மலை ஊர்களின்பெயர்கள் சிலவற்றை இவரது "பழந்திராவிடம்"† எனும் நூலிலிருந்து இங்கு எடுத்துக்காட்டுவோம்.

பலுச்சிஸ்தானத்திலும் பாரசீகத்திலும் உள்ள பார்வார் (Polwar) கப்பார் (Kappar) சினர் (Tschinar) பேய்வார் (Peiwar) காவார் (Kawar)) ராவார் (Rawar) எனும் ஆற்றுப்பெயர்கள் முறையே பாழாறு கப்பாறு சின்னஆறு பேயாறு புல்லாறு காவாறு இருவாறு எனத் தோன்றும். இறான் (Iran) எனும் பெயரும் (கிரேக்கத்தில் Ariane) பழம் பாரசீகத்தில் ஹறைவா, ஹறயேவா எனநின்று நீர்வளமுள்ளநாட்டை உணர்த்துவதால் ஆறு எனும் பெயரிலிருந்து பிறந்ததே எனப் பிற ஆராய்ச்சியாளரும்

---

* Armalurisches in fruheuropaischen Nomen von A Clemens Schoener, Partenvirchen, 1928.

† Altolrandetches A. Clemens Schoener, Partenverchen. 1927.

கூறுவர். இருனுக்கு மேற்கே யுபிருத்திஸ் தீகிறிஸ் எனும் நதிகள் பாய்கிற தாழ்ந்த பூமியில் சினெயார் (எபிரேயத்தில் Schinar) என ஒரு இடமுண்டு (சனிப்பாகமம் 11: 2). அதன்கருத்து இரண்டு ஆற்றுக்கிடையி லுள்ள நிலம் என அறிஞர்கள் தற்காலம் ஒத்துக்கூறுகின்றனர்கள். இச்சொல் லின் முந்தியபாகம் எபிரேயத்தில் ஷெனே=இரண்டு என்பது. பிந்தியது ஆறு எனும் தமிழ்ச்சொல்லே என்பர். இது கிரேக்கத்தில் மெஸொ=பொத் தாமியா (Meso-potamos ஆற்றின் இடை) என்பதற்குச் சரியாய் அப்பெய ருள்ள தேசத்தின் கீழ்பாகத்தை உணர்த்தும். பின்னும் கல்தேயாவில் உள்ளதாக விவிலியநூல் கூறுகின்ற (எசேக்கியேல் 1 ஆதியன) கெபார் எனும் நதி (Chebar) நல்லாராய்ச்சியின்வழி கவி-ஆறு (கன்னடம் gavi = தமிழ் கெவி = பள்ளம்) அல்லது வெட்டிய ஆறு எனும் பொருள்பட்டுத் தமிழ்ப்பெயரே ஆகின்றது. நம்முடைய காவேரியும் வெட்டாறு எனும் பெயருடையதாயிருத்தலை நோக்குக. பழைய பபிலோனியாவிலே ஊர் எனும் நகரம் இருந்த இடம் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அதன்பெயர் அக்கத்தியபாஷையில் உரு, சுமேரியத்தில் உரி, உரு எனப் படும். இது தமிழ் "ஊரே"யன்றி வேறல்ல. சந்திரதெய்வவழிபாட்டுக்கு உறைவிடமாயிருந்த அந்நகரி கட்டப்பட்டிருந்த ஆற்றின்பெயரை முகையிர் (Mugheir) என்றும் எல் முக்கைஜார் (El Mukkaijar) என்றும் சொல்லு வர். இது தமிழ் முக்-கை-ஆறுதானேயாகும். யுபிருத்தீசும் திகிறிசும் அவற்றை ஒன்றாய் இணைக்கின்ற ஒரு கால்வாயுமாக மூன்று கையுள்ள ஆறு என்பது பொருள். முன்சொல்லிய சந்திரவழிபாட்டுக் கோயிலுக்கு நன்னர் (Nannar) என்ற பெயரிருந்தது. இதுவும் முக்கையாற்றைப்போல் நான்கு ஆறுகளையே குறிக்கும் என்ப. முக்கை ஆற்றுநீர் மீட்டு ஓடிய கால்வாயோடு நான்கு ஆறு எனும் நன்னாற்றுப்பெயர் வந்ததாம். இச்சொல்லே நதிக்கு அக்கத்தியமொழியில் பெயரான நரு Naru (எபிரேயம் Nahar) எனுஞ் சொல் லுக்குப் பிறப்பிடம்போலும். நன்னருக்கும் அப்பால், சிப்பார் (Sippar) எனுமிடத்தில் ஒரு சூரியதேவாலயம் இருந்தது. இதுவும் சந்தேகமின்றி சிப்பியாறு (யுபிருத்தீசின்கிளை) எனும் தமிழ் ஆற்றுப்பெயரினின்று உண் டான இடப்பெயரேயாம். பபிலோனியாவில்தானே வடகிழக்கில் பின்னும் நமார் (Namar) எனும் ஒரு ஊரின் சிலபாகங்கள் நேபுகடநேசார் அரசனால் முன்னாளில் ஒரு போர்வீரனுக்கு மானியமாக அளிக்கப்பட்டன. அங்கு வெட்டப்பட்ட ஒரு கால்வாயின் நிமித்தம் அது நம்மாறு என்று தமிழில் பெயர்பெற்றது என்ப. அதனைவெட்டி உபயோகித்துவந்தோர் நம்முடைய ஆறு என அதற்குப் பெயர் இட்டனர்.

இவைபோலும் பல பிற ஆறுகளின் பெயர்கள்மட்டுமன்று, அராபியா எனும் தேசப்பெயரும் நமது ஆறு எனும் சொல்லைத் தலையிற்கொண்டதே என்பர். அரியானரும் தோலமேயரும் (Arrianos, Ptolemaios) அத்தேசத்தின்பெயரை அறபிஸ அறபியொஸ எனக் காட்டுகின்றனர். இது ஆறு எனும் தமிழ்ப்பெயரும் ஆப் (=ஆறு) எனும் பாரசீகபாஷைப் பெயரும் சேர்ந்து இருபெயரடுக்காய் ஆறுப் என்று ஆகியதற்குக் கிரேக்கர் தங்கள் பெயர்ச்சொற்களின் விகுதியாகிய இஸ அல்லது இயொஸ் எனும் கடைநிலை கொடுத்து அறபிஸ அறபியொஸ என்றனர். முந்தி ஆற்றங்கரையில் வசித்தோர் ஆறு என்றதைப் பின்வந்த ஆரியர் தங்கள் பாஷைச்சொல்லுஞ் சேர்த்து ஆறுப்என வைக்க,அதுவே கிரேக்கருடையவாயில் அறபிஸ ஆயிற்று. அப்பால் பாரசீகக் குடாக்கடலுள் நீண்டிருக்கும் கதர் (Katar, El katr) எனும் தீபகற்பம் கடர் (கடல்) எனும் தமிழ்ச்சொல்லே. அதன் தலையிடமான கதரு (Cadara)வும் செங்கடலில், பாரசீகக்குடாவில் மீன்பிடித்த தமிழர் அறிந்து பெயரிட்டதுவே. கதரூசியர் (Kedrosia, Gedrosi, Gedrusi) என்னப்பட்டவர்களும் கடலோரத்திலிருந்தவர்களே. ஒசி (Osi) என்பது கிரேக்கர்கொடுத்த கடைநிலை. அது இடத்தை உணர்த்துவது. அல்லது அது ஆட்சி என்றதின் (கடல் ஆட்சி) மரூஉ ஆகலாம் என்ப. திரையோடு சம்பந்தங்கொண்ட திரமிலர் (=தமிழர்) தாம் குடியிருந்த நாட்டுக்குக் கடலாட்சி எனப் பெயரிட்டமை எவ்வளவுபொருத்தமாகின்றது !

இனி மலை என்றசொல்லை உட்படுத்திய பெயர்கள் பலுச்சிஸ்தானம், ஆப்கனிஸ்தானம் பாரசீகம் ஆதிய மேற்குப்பிரதேசங்களில் உள்ளவைகளிற் சிலவற்றை நோக்குவோம். பலுச்சிஸ்தானக்கரையில் ராஸ்மலன் (Ras Malan) எனும் மலையும், அதற்கு மேற்கே அரியானர் என்பவர் காட்டும் மலனவும் (Malana) இருக்கின்றன. இன்றைக்கும் மல (Mala, Mula Peak) எனப்படும் ஒரு மலைச்சிகரமும் அங்கு உண்டு. ஆப்கனிஸ்தானத்து பிர்-மல (Bir-Mal) எனும் மலையும், இன்னும் அப்பாகங்களில் மலசன் (Mala Chan) சர்-மலன் (Sar-malan) மலஜேன் (Mala Djen) குஹ்மலு (Kuh Malu) ஆதியனவும் உள. கல் எனும் தமிழ் அங்கத்தோடு விளங்குகின்ற பெயர்களும் பல ஆப்கனிஸ்தானத்திலும் பலுச்சிஸ்தானத்திலும் காணப்படுகின்றன. கல்-தார் (அராபி-பாரசீகம் (Dar=நிலம்) கல்-புற-கன் (அராபி-துருக்கி-பாரசீகம். Chan=விடுதி), கல்-கொஷ் (Gosch) கல்-கல், கலக் (Kalag), கலத்த (Kalata) ஆதியன.

இனி நிலத்தன்மையைக்குறிக்கும் சொற்களுள் மண் என்ற தமிழ்ச்சொல்லொடு கூடியனவும் பல. மனோர (Manora=மண் ஓரம்), பார்மன் (Parman=பாழ்மண்) தல்மென (Talmena=தள்ளுமண்), கர்மன் (கிரேக்கநூல்களில் கர்மனே Karmane=கார்மணல். இது Karmania

எனவும்படும்) ஆதியன காண்க. ஓரம் என்ற தமிழ்ச்சொல்லும் பல இடப் பெயர்களில் தோன்றுகிறது. பாரசீகக்கரையில் புலோர (Pulora) எனும் தீவு உண்டு. அது தமிழ்ப் புல்லோரமாம். அக்கரையோரத்தவரை நூலாசிரியர் அரியானர் ஓரைத்தை (Oraitai) என்பர். அன்னோரைப் பிளினி எனும் சரித்திராசிரியர் மீன்பிடிகாரராகக்காட்டுவர் (Ichthyophagi Oritac); இவர்கள் ஆரியரல்லாத குலத்தவர்கள் என்றும் கிரேக்கநூலாசிரியர்கள் சொல்லுவார்கள். அப்பால், பல்லு (Karpella = கார்-பல்லு), தாழ்வு (Kirthar= கீழ்த்தாழ்வு) சார்வு (Sarvan-kala) ஆதிய வேறுசொற்களும் இடப்பெயர்களாகின்றன. கா=தோப்பு எனும் சொல் காபன (Kabana கா-வனம்) காபுல் (Kabul கா-புலம், புரம்) எனும் இடப்பெயர்களில் விளங்குகின்றது. வனமும் புரமும் தமிழ்ச்சொற்களேபோலும். வனப்பு புலம் புரத்தல் என்பனவற்றை நோக்குக. காபுல்நகரம் பல்வகைப் பழமரத்தோப்புக்களால் நிறைந்திருந்ததென்பது சரித்திர சம்மதம். கடரோசியாவின் பழைய தலைநகர் தனியே பொஉற (Poura=புரம்) என்று பெயரிடப்பட்டது. இன்றைக்கு அது Fahr - adsch எனப்படும். இச்சொல்லின் முந்தினபாகம் புரம் என்றதன் அராபிய உச்சரிப்பேயாம். இந்நகரத்தின்பெயரைத் தமிழரே இட்டனர் என்பது இதைச் சூழ இருக்கின்ற வேறு இடப்பெயர்களாலும் வெளிப்படும். இதற்கு மேற்கே காவிலார் (Haflar) எனுமிடம் ஆறு எனும் கடைநிலையுள்ளதாகின்றது. அங்ஙனமே வடக்கிலுள்ள தலாப் (தலைஆப்= ஆறு) என்பதுமாம். மேற்கே ஒரு பாம்பூர் (Bampur) உளது. வடஇந்தியாவிலும் சிந்துநதிக்கு மேற்கே ஒரு பாம்பூர் இருத்தலை நோக்குக. புரத்துக்கும் பாம்பூருக்கும் வடக்கே உள்ள சோராபார் (Sorabar) சோலையூரே எனத்தோன்றும். தமிழ் லகரம் பாரசீகத்தில் ரகரமாவது இயல்பு.

இனி முன்சொன்ன கல்தேயாவிலுள்ள ஊர் எனும் பட்டணப்பெயர் தமிழே என்றது தானே போதரும். மெசொப்பொத்தாமியாவிலும் ஒரு "ஊர்" உளது. உறையும் இடம்=ஊர். நம் இந்தியாவில் உறையூரோடு வேறநேக ஊர் இறுதியான பெயர்கள் (ஆங்கிலத்தில்-Ore) இருத்தலை அறிவோம். மெசொப்பொத்தாமியாவில் ஒரு நிப்பூர் (Nipur, அக்கத்தியத்தில் Nippura சுமேரியத்தில் Nipru) உளது. பபிலோனியாவில் இருந்த ஊருக் (Uruk) என்றது ஊருக்கு என்றதிலிருந்து வந்ததுபோலும். இவ் ஊருக்கு எனும் பெயர் விவிலியத்தில் எறெக் (அறக்) என்றும் கிரேக்கத்தில் ஓர்க்கொயெ என்றும் வந்தது. அதன் அக்கத்திய உருவம் அர்க்கு என்பது. பபிலோனிய நகரத்துக்கு மேற்கேயிருந்த குது (Kutu, Kuta) என்ற இடம் குடி ஆகலாம். வேறுபாஷைகளில் அதற்குப் பொருளில்லை.

இவற்றையும் இங்குக் குறியாத பலப்பல இடப்பெயர் ஒற்றுமைகளையும் கொண்டு காணக்கிடப்பது யாதெனில், பண்டைக்காலங்களில் யுபிருத்திஸ், திகிறிஸ் எனும் நதிகளை அண்டிய பாகங்கள் மிகச் செழிப்புள்ளவைகளாயிருந்தமையைநோக்கி ஆதிமனிதர்குழாங்கள் அங்குக் குழுமி நகரங்களை உண்டாக்கினார்கள். அந்நகரங்களுக்கும் அவற்றைச்சூழ்ந்த ஆறு மலை யாதியவைகளுக்கும் இடப்பட்ட பெயர்கள் தமிழாயிருப்பதினால் அப்பாகங்களின் ஆதிக்குடிகள் தமிழரே என்பது நன்றாக நிச்சயிக்கப்படும். இவ்வாறு முன்பு மெசப்பொத்தாமியாவிலும் அக்கத்தியாவிலும் பரந்திருந்தவர்கள், பின்பு, சற்றுச்சற்றாக பாரசீகம் ஆப்கனிஸ்தானம் பலுச்சிஸ்தானம் எனும் இடங்களிற் குடியேறி, அப்பால் வட இந்தியாவிற் புகுந்து, படிப்படியாய்த் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும் அன்று, கிழக்குத்தீவுகளிலும் பரந்தார்கள் என்றுதோன்றும். பாரசீகத்தைநீங்கி இந்தியாவுக்குவரும் இடைவழியில் விட்டுவந்தவர்களே பலுச்சிஸ்தானத்திலுள்ள பிராகூயிகள் எனலாம். பிராகூயிகள் பிற்காலம் இந்தியாவின் அலெப்போவில்நின்று பலுச்சிஸ்தானத்திற்குச்சென்று உறைந்தார்கள் என ஊகிப்பாரும் உளர்.* தரைமார்க்கமாய்த் தமிழர் இந்தியாவிற் குடியேறியதற்கு இடப்பெயர்களன்றிப் பழக்க வழக்கங்கள் சமய ஆசாரங்களின் சாட்சியும் மிக உண்டு. அதை ஆராய்தற்கு இது இடமன்று. அப்படியாயின் கடல்மார்க்கமாயும் தமிழர் இந்தியாவிற் சேர்ந்தது உண்டோ எனில், அதற்குப் போதிய ஏதுக்கள் இல்லாவிடினும், கடல்மார்க்கக் குடியேற்றமும் ஓரோர்காலத்தில் நிறைவேறியிருக்கலாம் என்று கொள்வதில் ஆட்சேபமிராது. தமிழர் முன் இருந்த இடங்களிற் பிறசாதியார்வந்து நெருங்கியமையே அவர்கள் அவ்விடங்களைச் சிறிதுசிறிதாய்க் கைவிடக் காரணமாயிற்று எனலாம். இதற்கு வடஇந்தியத் தமிழ்க்குடியேற்றம் தக்க ஒரு சான்று. ஆரியர்வரவினால் நெருக்குண்டே வடஇந்தியத் தமிழர் தென்னிந்தியாவை நாடினர். வலசைவாங்காமல் தத்தம் இடங்களில் மீந்திருந்தோர் வந்தவர்களோடு கலந்து வேறுகுலங்களாய்ப்போயினர். இவ்வாறே வடக்கிலும் வடமேற்கிலுமிருந்து வந்த ஆரியர் கல்தேயா அக்கத்தியா ஆதிய இடங்களின் பூர்வகுடிகளாகிய தமிழரை நெருக்கித் தள்ளிவிட்டுத் தங்களுக்கு இடங்கோலிக்கொண்டனர். வலசைவாங்கிய தமிழர் போக எஞ்சிய தமிழர் வந்தவர்களோடுகலந்து மாறிப்போய்விட்டனர்.

[தொடரும்]

* Sir Denys Bray: The Brahm Language Part II p. 3 & seq.

மதிப்புரை

தொல்காப்பியப் பொருளதிகாரம்: பின்னான்கியல்களும் பேராசிரியமும்—இஃது யாழ்ப்பாணத்துப் புன்னாலைக்கட்டுவன் தமிழ் வித்துவான் ஸ்ரீமத் சி. கணேசையரவர்களால் பல ஏட்டுப்பிரதிகளோடு ஒப்புநோக்கிப் பரிசோதித்து அச்சிடப்பெற்றது. உரைக்குறிப்புக்களென ஐயரவர்கள் ஆங்காங்கு எழுதிச்சேர்த்த பகுதி இப்பதிப்பின் சிறப்பியல்பாக விளங்குகின்றது. இந்நூலும் உரையும் இதற்குமுன்னம் மும்முறை அச்சில்வெளிவந்தனவாயினும், இம்முறை பல புதிய திருத்தங்களோடு கூடியுளவென்று இதன் முகவுரையால் தெளிவாகிறது. தமிழணங்கின் செவ்வி குலையாமற் பாதுகாக்க, இதுபோன்ற பதிப்புக்கள் எத்துணையாயினும் வரவேற்கத் தக்கனவேயாம்.

இப்பதிப்பினும் அமைவுபெறாமல் நாளடைவில் ஆராய்ந்து அமைவுகாணற்குரிய பகுதிகள் மற்றும் பலவுளவென ஐயரவர்கள் உடன்பட்டிருப்பது, அவர்களுடைய கல்விநிரம்பிய அடக்கத்தை அழகுசெய்கின்றது. முன்னரே தொல்காப்பியச்சேனாவரையமுதலிய இலக்கணநூற்பதிப்புக்களாலும் ஐயரவர்கள் பெருமையெய்தியுள்ளார்கள். அன்றியும், தன்னிகரில்லாத் தமிழ்த்தனிவீரராய்ச் சிறந்துவிளங்கின சுன்னாகம் ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவர்போன்ற பெரியாரைத் தம் ஆசிரியராகப்பெற்றமையே, பழந்தமிழிலக்கண பரிபாலனப்பணியில் ஸ்ரீமத். சி. கணேசையரவர்கட்குள்ள தகுதியை நிலையிடவல்லதாகும். இது நிற்க.

இப்புத்தகத்தின் பொருளடக்கத்து உரையாசிரியர்வரலாறும், மெய்ப்பாட்டியல் உவமவியல்களின் சுருக்கமும், அவ்வியல்களின் உதாரணச்செய்யுளுரையும், உரைவிளக்கக் குறிப்புக்களும் ஆகிய பகுதிகள் பயில்வோர்க்குப் பயன்படுவதில் ஐயமில்லை. மிகவும் அருவிலைக்காலமாகிய இஞ்ஞான்று பொருண்முட்டுப்பாடு முதலியவற்றைப் பொருட்படுத்தாது இதனைச் செவ்வையுற அச்சியற்றி வெளியிடுவித்த ஈழகேசரிப்பத்திராதிபர் ஸ்ரீமாந். நா. பொன்னையபிள்ளையவர்களின் தமிழ்த்தொண்டும் பரோபகாரமும் பாராட்டற்பாலன. மிகவும் நல்லகாகிதம், அழகான அச்சு, உறுதியான கட்டடம், இவற்றுடன் 800 பக்கங்களளவுள்ள இப்புத்தகத்தின் விலை ரூ. 9. கிடைக்குமிடம்:- தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

இராணி மங்கம்மாள்:—இது, பாண்டிநாட்டரசியாய்ப் பெருஞ் சிறப்புடன் விளங்கிய ராணிமங்கம்மாளின் சரிதத்துச் சிலநிகழ்ச்சிகளைப் புனைந்து நாடகமாக இயற்றப்பெற்றது; வீரச்சுவைமிகுதியும் விரவப்பெற்றது; பாத்திரங்களின் தகுதிக்கேற்ற பாடல்களும் உரையாடல்களும் உடையது; அரசர் அமைச்சர்க்குரிய ஆள்வினைத்திறமும் சூழ்ச்சித்திறனும் ஆதிய நலங்களை இனிது விளக்குவது. இதனை இயற்றியவர் யோகி ஸ்ரீ. சுத்தானந்தபாரதியாராவர். இதன் விலை அணு 12. வேண்டுவோர் திருச்சிஜில்லா ராமச்சந்திரபுரம்போஸ்டு அன்புநிலயத்திற் பெறலாம்.

இளங்கோவடிகள் சமயம் யாது? என்ற தலைப்பிட்டுத் தென்னிந்திய ஜீவரட்சாப் பிரசாரஸபையின் பிரதமப்பிரசாரகர் திரு. T. S. ஸ்ரீபால் அவர்கள் எழுதிவெளியிட்ட புத்தகமொன்றுவந்தது. சமரசநிலையால் தலைசிறந்த நூலாசிரியர் சிலரை இந்நாட்டுள் ஒவ்வொருமதத்தினரும் தத்தம் மதத்தினரென்றுகொண்டு பெருமையடைகின்றனர். அம்முறையில் ஸ்ரீபால் அவர்கள் தாங்கண்ட ஏதுக்களைக்கொண்டு சிலப்பதிகாரநூலாசிரியரான இளங்கோவடிகள் ஜைனமதத்தினர் என்று துணிந்ததனை இதனுள் விரித்துள்ளனர். தஞ்சை மஹாவீர ஜைனசங்கத்தாரால் திரு. ராவ்பஹதூர் A. சக்ரவர்த்தி, M.A., I.E.S. அவர்கள் உதவிய ஆங்கிலமுன்னுரையுடன் வெளியிடப்பட்ட இதன் விலை அணு 4. வேண்டுவோர் தஞ்சை மஹாவீர ஜைனசங்கத்திற் பெறலாம்.

ரமணசரணப்பல்லாண்டு:– [இயற்றியவர்-பாரத்வாஜி முகவைக் கண்ணமுருகனார். விலை ரூபா 1. கிடைக்குமிடம்:—கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.] திருவண்ணாமலையில் வீற்றிருந்து தவம்புரியும் ஸ்ரீ ரமணமுனிவர் பெருமை உலகறிந்தது. அம்முனிபுங்கவர்திறத்தெழுந்த அன்பின்பெருக்கினால் முகவைக் கண்ணமுருகனார் இயற்றிய துதிநூல்கள் பல. அவற்றுள் ஸ்ரீ ரமணசரணப்பல்லாண்டு பலவேறு யாப்புவிகற்பங்களால் எட்டுப் பகுதிகளுடையதாக இயற்றப்பெற்றுளது. பரம்பொருட்குப் பல்லாண்டுபாடுவதினும் அப்பரம்பொருளை அகக்கண்ணாற்கண்ட பெரியார்விஷயமாகப் பல்லாண்டு பாடுவது சிறந்ததென்றுகொண்டு முருகனார் இதனை இயற்றியது பாராட்டத்தகும்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 42-ஆம் வருஷோத்ஸவ

மங்களவாழ்த்து.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்

திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியது.

திங்கள் சூடிய வேணியெம்மிறை சேவடித்துணை சென்னிவைத்
தங்கை கூப்பி வணங்கி நாளும் அகங்குழைந்து தழைந்திடும்
சிங்க ஏறென ஆண்மை வண்மை திகழ்ந்ததேசுட னற்சுப
மங்களம்புனை ராஜ நாம வரோதயன் புகழ் வாழியே! (1)

மாமதுரைச் சங்கம் வயதொரு நாற்பத்திரண்டு
நேமிதனிற் பெற்று நிலவுமிந்நாள்—சாமிநீ
ஆண்டு விழாவிற் கதிபனென வந்ததுநாம்
பூண்ட தவப்பயனென் போம் (2)

சேது காவல னென செம்பியர் சேகரன் குல சேகரன்
தென்னர் செந்தமிழ் தம்மதென்று செகம் புகழ்ந்திட ஆள்பவன்
ஓது சண்முக ராச ராச னுவந்து மக்களு மொக்கலும்
ஊழி யூழி சிறந்து வாழிய ஓங்கல் போற்புக ழோங்கியே (3)

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

42-ஆம் வருடக்கொண்டாட்டம்

நிகழும் சுபானுஸு கார்த்திகைமீ 6, 7உ (1943-ம்ஸு நவம்பர்மீ 21, 22)உகளில் நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நாற்பத்திரண்டாம் வருடக் கொண்டாட்டம் இராமநாதபுரத்தில் மாட்சிமைதங்கிய சேதுவேந்தர் அரண்மனையிலுள்ள இராமலிங்கவிலாசத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. செந்தமிழ்ச்செல்வச் சேதுமன்னர் முதலிய புரவலர்களும் மஹாவித்துவான் பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்காரவர்கள் ஆதிய புலவர்பெருமக்களும் பிரபுக்களும் வழக்கறிஞரும் பிறரும் திரளாக விஜயம்செய்து குழுமியிருந்தனர்.

6உ (21—11—43) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மஹாஸபை கூடியது. தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர் திரு. K. சிவஞானம்பிள்ளையவர்கள் கடவுள்வாழ்த்துக்கூறினர். தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனரான மேன்மைதங்கிய சேதுவேந்தரவர்கள் விழாத்தலைவர்க்கும் புலவர் பெருமக்களுக்கும் நல்வரவுகூறித் தமிழைப்போற்றுதல் தம்குலதருமமென்று தம் தந்தையார் முன்பு ஒருகால் இச்சங்கவருஷோத்ஸவத்தை முகவைமாநகரில் நடத்தியதுபோலத் தாமும் இம்முறை இக்கொண்டாட்டத்தை நடத்துவதாக உரைத்து மஹாகனம் பொருந்திய ஸர் P. T. ராஜன் (Kt. M.A. (oxon), Bar-at-Law) அவர்களை அம்மஹாஸபைக்குத் தலைவராக வீற்றிருந்து சிறப்பிக்குமாறுவேண்ட, கனம் P. T. ராஜன் அவர்கள் அக்ராசனத்தமர்ந்தார்கள். பின்னர் மதுரைப்புத்தகவர்த்தகர் திரு. E. M. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள் சேதுவேந்தர்பெருமானுக்கு மாலைசூட்ட, மஹாவித்வான் பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்காரவர்கள் கனம் P. T. ராஜன் அவர்களுக்கு மாலைசூட்டினார்கள். அதன்பின் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையின் உதவியாசிரியர் T. K. இராமாநுஜ ஐயங்கார் ஸபைத்தலைவர்க்குத் தமிழ்ச்சங்கத்தார்சார்பில் தாம் இயற்றிய வரவேற்புப்பாடல்களைப் படித்தளித்தனர்.

சேதுவேந்தர்பெருமான் மதுரைத்தமிழ்ச்சங்கத்தலைவராயிருந்து தமிழ் புரந்துவருதலைப்பாராட்டி அவர்களுக்குத் தமிழ்ச்சங்கத்தார்சார்பில் செந்தமிழுதவியாசிரியர் T. K. இராமாநுஜையங்கார் இயற்றிய வாழ்த்துப் பாடல்கள் தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர் திரு. பண்டிதர் R. வீரராகவையங்காரவர்களால் படித்தளிக்கப்பட்டன.

பின்னர் திரு. ராஜன் அவர்கள் தமக்குத் தலைமைப்பதவியளித்தது குறித்துச் சங்கத்தார்க்கு நன்றிபாராட்டி முன்னுரைகூறச் சங்கத்தின் கௌரவகாரியதரிசி திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் இக் கொண்டாட்டத்துக்கு வரமுடியாமையால் சங்கத்தின் அங்கத்தினரும் அபிமானிகளும் அனுப்பிய தந்திகடிதங்களையும் சங்கத்தின் 42-ஆம் வருட அறிக்கைப்பத்திரத்தையும் படித்தார்கள்.

அதன்மேல் ஸேதுஸமஸ்தான மஹாவித்வான் பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்காரவர்கள் பாஷைக்குத் தப்புவார்கண்டன் என்ற பட்டப் பெயர்கொண்டு சேதுபதிகள் தமிழ்புரந்துவரும் மாண்பைவிளக்கி அவர்க ளாதரவில் இச்சங்கம் புரிந்துவரும் தமிழ்ப்பணிகளைப் பாராட்டினார்கள்.

யாழ்ப்பாணத்துத் திருவாளர் வ. சு. இராஜஐயனாரவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கம் தோன்றியபிறகு அதனாதரவில் நடைபெறும் தனித்தமிழ்ப் பரீக்ஷைகளால் இந்தியாவிலும் ஈழநாட்டிலும் தமிழ்ப்புலவர்கள் பல்கிவருவ தை மகிழ்வுடன் தெரிவித்து இச்சங்கம் நன்குதழைத்து நெடிதுவாழ அருளும் வண்ணம் இறைவனை வாழ்த்தினர்.

திருவாளர் வித்துவான் ராவ்ஸாஹிப் மு. இராகவையங்காரவர்கள் இச்சங்கம் தோன்றிய வரலாற்றையும் தமக்கு இச்சங்கத்தோடுள்ள தொடர் பையும் விளக்கி இச்சங்கம் செய்துவரும் தமிழ்ப்பணியைப் பாராட்டினர்.

மதுரை வழக்கறிஞர் ஜனுப் முஹம்மதுசுல்தான் M.A., B.L. அவர்கள் சாதி சமய வேறுபாட்டால் பல குழுவினராய மக்களையும் ஒருங்கிணைப்பது பாஷையே என்றும் இனிவரும் உலகபுனரமைப்பில் மொழிகொண்டே மக்கள் ஒரு குழுவினராகக் கருதப்படுவரென்றும் மேனாடுகளில் உள்ள மக்கள் சாதிமுதலியவற்றாற் பலபிரிவினராயினும் பேசும்மொழியால் ஓரினத்தவ ராய் மேம்பட்டுள்ளனரென்றும் அவ்வாறே தமிழ்பேசுவோர் எவராயினும் அவரெல்லாம் தமிழர் என்று ஒரு குழுவினராக இணைந்துமுயன்றால் தமிழ் சிறப்புறுமென்றும், அங்ஙனமுயலுறமுயல்வது தமிழ்ச்சங்கத்தின் கடமையென் றும் கூறினார்கள்.

மதுரைநகரஸபைத்தலைவர் திருவாளர் P. அரங்கஸாமிநாயுடு அவர்கள் நாட்டில் ஒரு கிளர்ச்சி யெழுந்துளதென்றும் அது அரசியல்பற்றியெழுந்த தெனினும், அதனடியாக மக்களுக்கு நாட்டுமொழிப்பற்றும் மிக்குளதென் றும் இச்சமயம் தமிழ்நாட்டுமக்களுக்கெல்லாம் பயன்படும்வகையில் இச் சங்கம் பலதுறையிலும் மேலும்மேலும் முயலவேண்டுமென்றும் கூறினர்.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையின் கௌரவ தலைமையாசிரியரும் செந்தமிழ்ப்பத்திராசிரியருமான திரு. நாராயணையங்காரவர்கள், தமிழ் குமரிமுதல் இமயம்வரை வழங்கிவந்ததென்பதைச் சிலஏதுக்களால் நிரூபித் தும், உலகம் இயல் வேறுபடுவதுபோல மொழியும் வேறுபடுவதுண்டென்றும்

அவ்வாறு மொழி வேறுபட்டும் சிதைந்தும்போகாது பாதுகாப்பது சங்கங்களின் கடமையென்றும், முத்தமிழ்வேந்தரும் சங்கங்கண்டு தமிழ்சிதையாதவாறு புரந்ததுபோல அவர்கால்வழியினரான ஸேதுவேந்தர்களும் இச்சங்கங்கொண்டு தமிழ் புரந்துவருகின்றனரென்றும், இவர்களும் இச்சங்கமும் பலவளனும் நிரம்பப்பெற்று நெடிதுநின்று தமிழ்வளர்த்துவரும்வண்ணம் தமிழ்மக்கள் உதவிபுரியவேண்டும் என்றும் கூறினார்கள்.

அதன்மேல் சங்கப்பரீக்ஷைகளில் தேறியவர்களுக்கு அக்கிராஸநரவர்கள் பரிசுகளை வழங்கிப் பின் தம்மை வரவேற்றுத் தமக்குத்தலைமைப்பதவியளித்ததுபற்றி மீட்டும் சங்கத்தார்க்கு நன்றிதெரிவித்தும் தமக்குத் தமிழில் மிக்க ஆர்வம் உண்டென்றும், இச்சங்கத்தார் குறித்தபடி அவர்களுடன் சேர்ந்து தமிழ்த்தொண்டாற்றத் தாம் மகிழ்வுடன் முன்வருவதாகவும் தெரிவித்தார்கள்.

பின்னர் சங்கத்தின் உபஅக்ராஸநரான திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் இவ்வருஷவிழாவுக்குமுன் சில ஆண்டுவிழாக்கள் நடைபெறாமைக்குக்காரணங்கூறியும் அவ்வாண்டுகளின் சங்க வரவுசெலவுகளும் சங்கமுயற்சிகளும் நிகழ்ந்துவந்தவிவரம் தெரிவித்தும் இவ்வருஷவிழாவை நன்கு நிறைவேற்றித்தந்த தலைவர் கனம் P. T. ராஜன் அவர்களுக்கும் சங்கத்தின் நிரந்தர அக்ராஸநரான ஸேதுமன்னரவர்களுக்கும் விஜயம்செய்து இவ்விழாவைச் சிறப்பித்த தமிழ்ப்புலவர்பெருமக்களுக்கும் பிறர்க்கும் நன்றி கூறியும் உருக்கமானதோர் சொற்பொழிவாற்றினார்கள்.

அதன்பின் தென்திருப்பேரை ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்கள் இயற்றியனுப்பிய வாழ்த்துப்பாடலை இராமநாதபுரம் ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான் திரு. ரா. இராமாநுஜையங்காரவர்கள் படிக்கவும், புதுக்கோட்டைமகாராஜாகாலேஜ் தமிழாசிரியர் பண்டித. நா. கனகராஜையரவர்கள் இவ்விழாவிஷயமாகத் தாம் இயற்றிய மங்களவாழ்த்துப் பாடலைப் படிக்கவும் தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர் திரு. K. சிவஞானம் பிள்ளையவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடவும் இரவு 8 மணிக்குச் சபை இனிது நிறைவெய்தியது.

அப்பால் இரவு 9 மணிக்கு கனம் P. T. ராஜன் அவர்கள் தலைமையில் சங்க அங்கத்தினர்களின் மஹாசபை கூடியது. சங்கக்காரிய நிர்வாகஸபையார் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். சங்கவிதிகள் சில திருத்தப்பெற்றன. தீர்மானங்களும் செய்யப்பெற்றன.

7௳ காலை 11 மணிக்கு மீண்டும் கனம் P. T. ராஜன் அவர்கள் தலைமையில் சபைகூடியது. திரு. சிவஞானம்பிள்ளையவர்கள் கடவுள்வாழ்த்துக் கூறியபின் திரு. பண்டித. அ. கோபாலையரவர்கள் தாம் எண்ணும் எழுத்தும்

என்பதுபற்றி யெழுதிய பொருளுரையைப் படித்துத் தமிழ்க்கணக்கைச் சங்கத்தாரும் பிறரும் வளர்க்கவேண்டுமென்று வற்புறுத்தினர்கள்.

அதன்பின் பண்டித. நா. கனகராஜையரவர்கள் ‘பழைமைக்கவியும் புதுமைக்கவியும்’ என்பதுபற்றிப் பேசத்தொடங்கிப் பழந்தமிழ்க்கவிகளின் நயத்தைப் புறநானூற்றிலுள்ள ‘இவ்வே பீலியணிந்து’ என்று தொடங்கும் ஔவையார்பாடல்கொண்டு விளக்கி இக்காலத்தும் இத்தகைய பெரும் புலவர்கள் எழுமாறு சங்கம் முயலவேண்டுமென்று கூறினர்கள்.

அதன்மேல் மதுரை ஸெயின்ட்ஜோஸப் பெண்கள் ஹைஸ்கூல் தலைமைத்தமிழாசிரியர் வித்வான் S. ஆழ்வாரையங்காரவர்கள் தமிழர்வீரம் என்பதுபற்றித் தாம் எழுதிய வியாசத்திற் சிலபகுதிகளைப் படித்தார்கள்.

அப்பால் வித்வான் ராவ்ஸாஹிப். மு. இராகவையங்காரவர்கள் சாசன ஆராய்ச்சியென்பதுபற்றித் தாம் எழுதிய வியாசத்தை சபையார் வியக்கும் வண்ணம் படித்துவிளக்கக் காலைநிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மாலை $4\frac{1}{2}$ மணிக்கு திரு. கோ. பெருமாள்பிள்ளையவர்கள் கடவுள்வாழ்த் திசைக்க ஸபைகூடியது. திரு. மாஸ்கரன்ஹாஸ் அவர்கள் தமிழ்ச்சுவை என்பதுபற்றிப் பேசினர்கள். யாழ்ப்பாணத்துப் பண்டித வ. சு. இராஜ ஐயனர் அவர்கள் தொல்காப்பியனர் கண்ட கடவுட்கொள்கை என்பதுபற்றிப் பேசத் தொடங்கித் தொல்காப்பியனர் வைதிகசமயத்தவரென்று விளக்கிமுடித் தார்கள். அதன்பின் இவ்வருஷவிழாவிற் படிக்கும்படி மதுரை வக்கீல் திரு. A. ரங்கஸ்வாமி ஐயரவர்கள் எதிழுயனுப்பிய மொழிநட்பு என்ற கட்டுரையின் சுருக்கத்தைச் சங்கக்காரியதரிசி திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் எடுத்துக்கூறினர்கள்.

அப்பால் பண்டித. நா. கனகராஜையரவர்கள் தாம் இயற்றிய இராவண வதைப் பரணியிலிருந்து சில பாடல்களைப் படித்துக்காட்டினர்கள். சங்கக் கலாசாலையாசிரியர் திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றிய வாழ்த்துப் பாடல்களை ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்வான் ரா. இராமாநுஜையங்காரவர்கள் படித்தார்கள்.

அதன்பின் அக்கிராஸனரவர்கள் நடந்த உபந்யாசங்களைப் பாராட்டியும் இச்சங்கம் பலதுறையிலும் தமிழ்மக்களனைவர்க்கும் பயன்படும்முறையில் முயன்று மேன்மேலும் செழிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தும் தாமும் தமிழ்ச்சங்கத்தாருடன்சேர்ந்து தம்மால் இயன்ற தமிழ்த்தொண்டுகளையெல்லாம் செய்ய இசைந்தும் முடிவுரை கூறினர்கள்.

பின்னர் வந்தனோபசாரங்கூறவும் திரு. கோ. பெருமாள்பிள்ளையவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடவும் சந்தனபுஷ்ப தாம்பூலங்கள் வழங்கப்பெற்று மாலை 7 மணிக்குச் சங்கவிழாப்பேரவை இனிது நிறைவேறியது. சுபம் சுபம்.

சுபானு ஸு கார்த்திகை மீ 6 உ (21—11—43)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

நாற்பத்திரண்டாம் வருஷோத்ஸவமஹாஸபையின்

அக்ராஸநராக விஜயஞ்செய்த

மஹாகனம்பொருந்திய ஸர். **P. T.** ராஜன், **Kt. M.A. (Oxon), Bar-at-law,** அவர்களுக்கு

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் அளித்த

வரவேற்புப்பத்திரம்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையின் உதவியாசிரியர்

T. K. இராமாநுஜையங்கார் இயற்றியது.

சந்தத்தாழிசை.

இதழிக்கிடை மதியம்புனை கயிலைக்கிறை யெழிலார்
பொதியத்திடை நிலவுங்குறு முனிவற்கருள் புரிசீர் (1)

மன்னுந்தமிழ் எங்குந்தழை தரவேவழு தியர்தாம்
முன்னன்பொடு சங்கம்பல முறையாநிறு வினரே (2)

வேலைத்திரை யாலுங்கலி காலப்புய லாலும்
மேலைத்தமிழ் நாடும்பனை யோலைத்தரும் ஏடும் (3)

மறைவுற்றவர் சங்கங்களும் அழிவுற்றிடு நிலைபோய்
நிறைவுற்றுல கெங்குந்தமிழ் நிலைபெற்றிடு கெனவே (4)

வேண்டிற்றுயர் தமிழ்நாவலர் பெறவேதரு விறல்வேள்
பாண்டித்துரை திகழ்கூடலி னிடையேபரி வுடனே (5)

தருமதுரைத் தமிழ்ச்சங்கந் தலமிசையே உயர்நெடியோன்
ஒருமதுரக் குரற்சங்கென் றுரைசெயுமா றிசையுடனே (6)

ஓரிருநா லுயர்தடந்தோள் உடையபரன் அருளுதலால்
ஈரிருபா னுடனிரண்டா கியவயது நிறைவுறுமே (7)

சங்கத்தார் இத்திருநாள் அவைத்தலைமை தாங்குகென
இங்குற்றாய் நற்றிருமா லெனக்கருணை யேய்ந்தனையால்! (8)

வேறு

மன்னம்பல வாணன்றிரு வடியேநினை மனமார்
பொன்னம்பல நாமன்தரு புயலேவடி வழகா! (9)

வேறு

ஒருத்யாக ராஜன் அடிமீது நாளும் ஒழியாத பத்தி யுறுவாய்!
வருத்யாக ராஜன் எனுநாம மேவி வரையா தளித்து வருவாய்! (10)

வேறு

தகவொன் றறம் ஆற்றிப்புரி தாளாண்மையும் உடையார்
மிகுதொண்டைநன் னாட்டுத்திகழ் வேளாண்குல திலகா! (11)

கலைநாட்டிய மதியாய்!கலி வலியோட்டிய நிதியாய்!
மலைகாட்டிய நிலையாய்!பகை வலிகாட்டினும் மலையாய்! (12)

கனிவூட்டிய மொழியாய்!கவின் அருள்காட்டிய விழியாய்!
துனியோட்டிய நகையாய்!தமர் துயர்வீட்டிய தகையாய்! (13)

அறம்நாட்டிய குடையாய்!புய வரைசூட்டிய தொடையாய்!
மறம்ஊட்டுசொல் உடையாய்!வசை அறவோட்டிய நடையாய்! (14)

வேறு

சென்னைத்திரு நகரந்தகு தேசுற்றுயர் சபைசேர்
மன்னப்புரி மதிமந்திரி யாகித்திகழ் வள்ளால்! (15)

நின்னன்புறு வரவால்நில மேழும்புகழ் நிறுவி
மன்னும்தமிழ் வளமேமிக வாழும்பரி சுறுமே. (16)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நின்வரவு நல்வரவாகுக வள்ளால்! நின்வரவால் நிறைந்ததான
பொன்வரவும் புகழ்மிகவும் எழின்மதுரைத் தமிழ்ச்சங்கம் பொலிந்து வாழ்க
மன்மருவு மதியுடையாய் வலியுடையாய் வாழ்வுடையாய் மாண்பு மிக்காய்
நன்மொழிசேர் புலவரெலாம் புகழ்ந்திடநீ வாழியெந்த நாளும் மாதோ. 17)

மிக்கஇசைத் தியாகராஜப்பெயர்கொள் பெருமான்! நீ மேன்மை யார்ந்த
மெய்க்குரிசி லான எழிற் சேதுநாட் டரசரொடு மேவி யென்றும்
தக்கவர்கள் புகழ்மதுரைத் தமிழ்ச்சங்கம் புரக்க அருள் தருக என்றே
கைக்களிறு காத்தபிரான் கழலிணைகள் எந்நாளும் கருது வோமே. (18)

சுபானு ஸ்ரீ கார்த்திகை மூ 6 உ (21—11—43)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

நாற்பத்திரண்டாம் வருஷோத்ஸவத்தில்

ஸ்ரீமத ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத ராஜா

மாட்சிமைதங்கிய ஷண்முகராஜேசுவர

நாகநாத ஸேதுபதி மகாராஜாவர்களுக்கு

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் அளித்த

வாழ்த்துப்பத்திரம்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையின் உதவியாசிரியர்

T. K. இராமாநுஜையங்கார் இயற்றியது.

சந்தன டவிப்பிறந்து தமிழ்நலமே திளைத்தெழுந்து தவழுஞ் சீத
மந்தமா ருதமுலவு கந்தமா தனவரையும், வைய மெல்லாம்
சந்தமே மிகுதமிழின் மணம்பரவ வருவையைத் தனிப்பே ராறும்
முந்துமா கடலுமெழில் தருசேது நாட்டுவளம் மொழியப் போமோ. (1)

காடெலாம் தெங்கினெடு மரகதப்பைங் காய்க்குலைகொள் கமுகின் ஈட்டம்
மாடெலாம் கதலியொடு மஞ்சளுமிஞ் சியும்கரும்பும் வாய்த்த நெல்லும்
வீடெலாம் அரம்பையரும் நாணஇய விசைநடந்தேர் மின்னார் கூட்டம்
நாடெலாம் தொழுஞ்சேது நாட்டுவளஞ் சேடனுக்கும் நவிலொ ணாதே. (2)

இந்நாட்டுக் கெழின்முகமா மியராம நாதபுரத் திருந்து நாளும்
தென்னாட்டிற் குடநாட்டில் வடநாட்டிற் குணநாட்டிற் சீர்த்தி மேவப்
பொன்னாட்டுப் புரந்தரன்போன் முறைபுரிந்த நிருபருளே புலவர்ப் போற்றி
எந்நாட்டும் இசைநிறுவு பாற்கரனார் தரவருவேள் இராஜ ராஜன். (3)

செய்ததவத் தாற்பிறந்து செந்தமிழ்மேன் மேற்சிறக்கச் சேது நாட்டார்
எய்தரிய பெருநிதியம் எய்தியதென் றுளமகிழ இசைவல் லோரும்
பொய்தபுநா வீறுடைய புலவர்களும் இனத்தாரும் பூரித் தேத்த
மெய்தெரியும் புலம்மிகுந்த ஷண்முகரா ஜேசுரநீ விளங்குகின்றாய். (4)

கொற்றவநீநின் குலத்துமுதல்வருளே அருங்குணத்தாற்கொடையால்தேசால்
நற்றிறமே வியமதியின் நுட்பத்தால் நூலறிவால் நடையால் வாக்கால்
கற்றவர்கள் புகழ்பாண்டித் துரையேபோல் அவன்நிறுவு கவினுர் சோலை
சுற்றுமெழில் மிகுமதுரைத்தமிழ்ச்சங்கம்புரந்துபுகழ்த் தோன்றலானுய். (5)

தென்னவ! நீ வளங்களெலாம் செறிராம நாதபுர ஜில்லா போர்டு
மன்னியயற் றிடுநலங்கள் பலவாகும் மேலும்மதி வல்லா ரான
பன்னரிய திறலமைச்சர் பாலாஜி யார்முதலாம் பண்பினேரால்
உன்னுரிமை நாடினிது புரந்தரசு புரிதலினும் உயர்ந்து நின்றய். (6)

அரசர்பலர் உளரெனினும் நினைப்போலச் சேதுநா டாளும் ஆக்கம்
தரைமிசையே பெற்றவரார்? கலைக்கழகத் தினில்தலைமை தாங்கித் தக்கார்
உரைபெறுவோர்களில் மதுரைத் தமிழ்ச்சங்கந் தாங்கியொளி பெற்ற மன்னர்
வரிசையினில் நினைப்போலச் சலியாது நிற்பவரார்? வழுத்துங் காலே. (7)

என்றும்இனி திவ்வணம்நீ யெழின்மதுரைத் தமிழ்ச்சங்கம் இலங்கத் தாங்கி
வென்றிநெடுஞ் சிலைத்தடக்கைப் பெருமானும் ஒருமான்கொள் விமலன்றானும்
மன்றுளுறை தருராஜ ராஜேசு வரியும்அருள் வழங்கிக் காக்கத்
தென்தமிழும் உயர்சேதுத் திருநாடும் புரந்துநனி சிறந்து வாழி. (8)

வாழி மதுரைத் தமிழ்ச்சங்கம் வாழி சேது வளநாடு
வாழி ராம நாதபுரம் வாழி சேது மகிபர்குலம்
வாழி நாக நாதனென வரு ஷண்முகராஜேசுரமன்
வாழி யுலகாள் அரசர்பிரான் வாழி வாழி மகிதலமே. (9)

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கனுறல் (5) இனியதுநாற்பது (உரையுடன்)	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	*திருச்செந்திற்கலம்பகம்			
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	*நரிவிருத்தம்			
21	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	*பாண்டியம்			
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	*வேளிர்வரலாறு			
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலர்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	*சந்திரகுப்தன்			
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 40 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.